# COUNTRY HERALD.

# கிராம தூதன்.

கௌரவ பத்திராதிபர்:
இரா. ந. நல்லதம்பிப் பிள்ளை. செல்லியூத்தூர்.

1942 ஜனவரி

மலர்-ச. இதழ்-க

15 JAN 1942

## வாழ்க்கை முறை.

நாம், பிறர் ஆக்கத்துக்குத் துணையாகவும் வாழவேண்டும்; அது முடியாது போயினும், பிறர் கேடுசூழாதேனும் வாழவேண்டும். பிறர்க்கின்னா நாம் முற்பக லி[illegible] னைக்[illegible], நமக்கின்னா பிற்ப[illegible]லேயே திட்டமாக விளைந்து [illegible]. ஆதலால், பிறரைக்கெடு[illegible] வாழக்கூடியதில்லை.

[illegible]ம் பெற்றோர்கள் நம்மை வளர்த்துவிட்டபடி நாமும் உலக வளர்ச்சிக்காக நம் மக்களை வளர்த்துவிட வேண்டும். நாம் பிறந்த இவ்வுலகை, நாம் பிறந்த காலத்திலும் செம்மையுறச் செய்திடவும் வேண்டும்.

நாம், நம் குடும்பத்தினருக்கு அவரால் தம்மைத்தாமே பேணிக் கொள்ளமுடியாத அளவிற்குக் கைமாறு கருதாதும் உதவிவருவது போல, இவ்வுலகமாம் பெருங் குடும்பத்தினரான பிறருக்கும் உதவிவரும் அளவிற்கே, இவ்வுலகம் நாம் [illegible]ற இட மாகு[illegible] [illegible]லா நா[illegible] [illegible]ங் [illegible]ா.

Y31m21155,N39T5
N42.4.1.
205593



சுழன்றும், ஏர்ப்பின்னதுலகம்—திருவள்ளுவர்.

## விசேடக் கட்டுரைகள்.

1. நம்மாசை என்று கைகூடுமோ?
2. நெல்லுக்குரமிடுதல்
3. கூட்டுறவூழியம்
4. குழந்தைகளைக் கீழ்ப்படியப் பழக்கவேண்டும்
5. கிராமப் பஞ்சாயத்து மசோதா
6. யானையைக் கட்டி யாரால் தீவனம் போடமுடியும்?
(உட்பக்கம் பொருளடக்கம் பார்க்க)

பிரசுரகர்த்தர்:
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் : பிரார்த்தனை | ... | ... | 1 |
| 2. | பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள் | ... | ... | 2 |
| 3. | நம்மாசை என்று கைகூடுமோ ! | ... | ... | 3 |
| 4. | நெல்லுக் குரமிடுதல் IV | ... | ... | 6 |
| 5. | கூட்டுறவூழியம் | ... | ... | 8 |
| 6. | ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள் | ... | ... | 11 |
| 7. | தீப்பெட்டியைக் குடிசைத் தொழிலாகவும் செய்யலாம் | ... | ... | 13 |
| 8. | சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை | | | |
| | அ. குழந்தைகளைக் கீழ்ப்படியப் பழக்கவேண்டும் | .... | ... | 14 |
| | ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள் | | ... | 15 |
| 9. | கிராமப் பஞ்சாயத்து மசோதா | ... | ... | 17 |
| 10. | யானையைக் கட்டி யாரால் தீவனம் போடமுடியும்? | ... | ... | 20 |
| 11. | செய்தித்திரட்டு: | | | |
| | அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள் | ... | ... | 22 |
| | ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள் | ... | ... | 23 |
| | இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள் | ... | ... | 24 |
| | ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள் | ... | ... | ,, |
| 12. | அறிவுரைத்திரட்டு : | | | |
| | அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள் | ... | ... | 25 |
| | ஆ. கிராம[illegible] புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள் | ... | ... | 29 |
| | [illegible] இலக்[illegible] இலக்கண அருங்கலைக் கல்வி யாராய்ச்சிக் குறிப்புக்கள் | ... | ... | 31 |
| | ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள் | ... | ... | 32 |


## மதிப்புரை

1. *கவிதையுள்ளம் - க. தமிழ்க்கலைப் பதிப்பக வெளியீடு-ம்க. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம். தமிழ்க்கலை ஆசிரியர், காஞ்சிபுரம். 64 பக்கம் விலை 4 அணா.*

"இவ்வாசிரியர் இசையை அன்பின் வழியியங்கும் அன்னையாகக் காண்பவர்; அதனை மறந்து உயிர் வாழார்; அஃதன்றி இவ்வுலகில் 'நிலைத்த சுகமும் காணார்.'' இவர் கவிதை யுள்ளத்திற்கு இவையோர் பதப்பேறும். ஆதலால், இக்கவிதை யுள்ளத்தை நாம் மனமாரப் போற்றுகின்றோம். தமிழறிஞர் பலரையும் இதனை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

2. **"மதுரைநகர் வரலாறு" மதுரைக் கல்லூரி புத்தகசாலாதிபர் சோமசுந்தரம் இயற்றியது. 1938. பக்கம் 83. விலை 5 அணா.**

இது மதுரை தெரியாதாரை அதற்கு அறிமுகப் படுத்தும், நாம் மதுரைவாசியே யென்பார்க்கும் பல அரிய செய்திகளைப் புகட்டும்.

3. *நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும் தருமபுர ஆதீன வெளியீடு எண் 41. பிரதிகள் 10000, 1941. பக்கம் 76. விலை 2 அணா.*

இது நால்வர் சரித்திரத்தையும் அருமை பெருமையையும் வெகு சுருக்கமாகவும் எளிய நடையிலும் அழகுபெற விளக்கும் அரியநூல். தேவாரத் திருமுறைத் திரட்டும் புதிய முறையில் மிகமிகப் பயன்படக்கூடிய வகையில் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எவரும் வாங்கக் கூடியதாக விலையும் மிகக் குறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. தருமையாதீனம் செய்துவரும் இத்தகைய பேருபகாரத்திற்குச் சைவவுலகம் என்றும் கடப்பாடுடையதாகும்.

4. *"தேவி" மாத வெளியீடு. விக்டோரியா அச்சகம், நாகர்கோவில். வருட சந்தா ரூ. 1—8—0.*

சேரநாட்டிற்கும் தமிழுண்டோவென ஐயுறச் செய்து வரும் சென்னைத் தமிழன் ஆட்சியில் இளங்கோவும் சேரமான் பெருமாளுயனாரும் குலசேகராழ்வாரும் பிறந்த பழந்தமிழ் நாடன்றோ சேரநாடெனத் தமிழுலகமறியச் செய்துவரும் இப்பத்திரிகையில் அரும்பெரும் தமிழ்ப் புலவர் கட்டுரைகள் பல மிளிர்ந்து வருகின்றன. தமிழன்பர்கள் ஆதரவிற்குரிய பத்திரிகைகள் சிலவற்றில் இஃதுமொன்றாகும்.

5. *திருக்குறள் நாட்குறிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 6, பவளக்கார வீதி, சென்னை. பென்சில்களோடுகூடியது, $7\frac{1}{2}$ அணா; சாதா $6\frac{1}{2}$ அணா.*

இது சாதாரணப் பஞ்சாங்கம் முதலிய விவரங்களோடு திருக்குறளும் அடங்கியிருப்பதால், தமிழருக்கு மிக உதவும் நாட்குறிப்பாகும்.

# THE COUNTRY HERALD

# கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்."

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

| மலர்: ௪. | 1942, சனவரி—விசு, தை | இதழ்: க |
|---|---|---|


## 1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்பல்லாண்டு.

(மிண்டு) மாறுபடும் மனத்தவர் போமின்(கள்); மெய் அடியார்(கள்) விரைந்து வம்மின்; கொண்டும் கொடுத்தும் குடிகுடி குழாம் புகுந்து ஈசற்கு (ஆள்) தொண்டு செய்மின்; அண்டம் கடந்த பொருள், அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்று (ஏ) பல்லாண்டு கூறுதும். (ஏ)

---

"சர்வம் விஷ்ணு மயம் சகத்" என்பது உபநிசத்துக்களில் உள்ள ஒரு யதார்த்த வசனம். நாம் அதை "சர்வம் பத்திரிகை மயம் சகத்" என மொழிபெயர்த்துக் கூறுகின்றோம். பொருத்தந்தானே?

ஓர் கிராமவாசி.

# 2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்

I தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி இருப்பதுவும் தீது.

ஔவையார்.

II. 1. சமயோசிதமாக, சுயநலமாகக் கட்சிகள் சேர்கின்றனவே யல்லாது, தருமக் கொள்கைகளே ஆதாரமாக அவை பிறப்பதும் அரிது. விவசாயமும் வர்த்தகமும், முதலாளியும் தொழிலாளியும் எதிரெதிர் மாறுபட்டு நிற்பானேன்? தரும பரிபாலனம் செய்வதென்றால், இவையெல்லாம் எந்த ஏற்பாட்டையும் பொதுவாகத்தானே பாராட்டவேண்டும்?

Emerson.

2. வயதும் அனுபவமும் முதிர்ந்தவர்களுக்கே, 'நீதி மன்றங்களும் இராச்சிய தந்திரமும் வெறும்பொய்யானவொரு மோச' மெனத் தெரிகிறது. இந்த அனுபவ அறிவைத் தங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லாமலே, அவர்களிறந்து போகின்றனர். அந்தப் பிள்ளைகளோ, தங்கள் வயதில் தங்கள் தகப்பன்மார் எண்ணியது போலவே, வர்த்தமானப் பத்திரிகைகள் சொல்லுவதே மெய்யென்று நம்புகின்றனர். இப்படி அசடர்களாயும் மோசம் போகக்கூடியவர்களாயும் இருக்கின்ற சனத்திரளின் பெரும்பகுதி (Majority) யைக்கொண்டு தேசங்கள் பாழாகாமல் என்ன செய்யும்?

Emerson.

3. இராச்சிய தந்திரம் என்று சொல்லப்படுகிற வசை யொன்றே அரசாட்சிக்குப் போதாதா? தந்திரம் என்றால் கபடம் என்று தானே அருத்தம்! அரசியல் எல்லாம் ஒரு பெரும் மோசமென்று இதனால் குறிக்கப்படவில்லையா?

Emerson.

III. 'இன்னொரு சொல்லினைக் கேட்டேன்—இனி
ஏது செய்வேன் எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந்திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத்தமிழ் இனிச்சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.'

என்று ஒருவன் கூறியதாகப் பாரதி கூறுகின்றனர். அவர் சொல்லியது போல, தமிழர்களே! இன்றே புறப்படுங்கள்!! 'சென்றிடுவீரெட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.' அவ்வாறு செய்வீர்களாயின், நம் தமிழன்னை புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பாள் என்பது திண்ணம். இது முக்காலும் திண்ணம்.

தமிழ்க்கலை.

3. தலையங்கம்:

# நம் ஆசை என்று கைகூடுமோ!

ஆசைக்கோர் அளவில்லை. அகில மெல்லாம் கட்டியாளினும் கடல் மீதிலும் ஆணை செலவே நினைவர்; அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும், நேசித்து இரசவாத வித்தைக் கலைந்திடுவர்; நெடுநாளிருந்த பேரும் நிலையாகவே எண்ணி, காயகற்பந்தேடி நெஞ்சுபுண்ணுவர். ஆம்.—தமக்குத்தமக்கென ஆசைப்படுபவரெல்லாம், இப்படியே அல்லற்படுவர். நம்மாசை வேறு. வீடுதோறும் கல்வியெனும் விளக்குத் துலங்க வேண்டும்; வாடுகின்ற மன்னுயிரின் வறுமைப்பிணி தீரவேண்டும்; அறியாமை அகலவேண்டும்; வறுமை ஒழிய வேண்டும்; உலகம் அன்பு மயமாய் இன்பமாய்த் திகழவேண்டும்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என நாம் விழைகிறோம். இவ்வாசை கை கூடுமா?

தற்கால மனப்போக்கு மாறினால், இவ்வாசையும் கைகூடும். நம்முலகம், விரிந்து பரந்த உலகம்; அதில் இருநூற்று நாற்பது கோடி மக்களுக்கு மட்டுமல்ல, இன்னும் பல நூறு கோடி மக்களுக்கும் இருக்க இடமும் உண்ண உணவுமுண்டு. அவற்றை நேர்மையாக மனமார நாம் பகிர்ந்து வாழ்வதில்லை; பாத்துண்பதில்லை. அவை யில்லாது போகவே, நம்முலக நன்மைகளெல்லாம் ஒரு சிலர் கையில் சிக்கிக்கொள்ள, எங்கும் விளைந்தும் பலர் கடன்பட்டும் பட்டினியும் பசியுமாக்க் கிடந்து உழலக் காண்கிறோம். நம் மனப்போக்கு மாறுமென்றால், எவருக்கும் உண்ண உணவும் உடுக்கத் துணியும் படுக்கப் பாயும் இருக்க இடமும் எளிதிலமையும். நம் மனப்போக்கு மாறுமா? மாறவேண்டும்.

பிறக்கும்பொழுது, நாம் கொண்டுவந்ததில்லை. பிறந்து மண்மேல் இறக்கும்பொழுதும், கொண்டுபோவதில்லை. இடை நடுவே நமக்குக் கிடைக்கும் செல்வமும் நமது உழைப்பும் பிறருக்கும் பயன்பட வாழ்வதால், பிறரும் வாழ்ந்து போவர்; நம் வாழ்க்கையும் மேன்மையுறும்.

நம்மில் எவருக்கும் அவரவர் நிலைமைக்கு ஒத்தவரும் அதற்கும் தாழ்ந்தவரும் பலருண்டு. நாம் அவர்களோடுறவாடியும் அவர்களுக்குதவியும் வர, அவர்களும் நம்மோடுறவாடியும் நமக்குதவியும் வரத் தயங்கமாட்டார்கள். இப்படியாக ஒருவருக்கொருவர் (Each for all; all for each) உதவி வர வேற்றுமையும் ஒழியும்; ஒற்றுமையும் வளரும். அன்பே அன்பைப் பெருக்க வல்லது. (Love begets love) வம்பையும் மறக்கச் செய்வது. அன்புடையார், உண்மையில் எல்லாம் உடையரேயாவர். அவருக்குக் குறைவதொன்றுமில்லை.

நம் முன்னோர்கள், பிறருக்கும் உதவியாகவே வாழ்ந்து வந்தனர்; செழுங் கிளையுந் தாங்கி வந்தனர். நாம் பிறருக்குதவாது போனாலும், பிறர் தம் உழைப்பால் வாழ்வதிலேனும் நமக்குப் பொறுமையிருக்கவேண்டும். (Live and let live) அப்படியுமிருக்கிறோமில்லை. மறந்தும், பிறன் கேடு சூழற்க; தாம் கெடினும் தக்கார்கேடெண்ணற்க; எனத் தெய்வப் புலமை திருவள்ளுவநாயனார் நமக்கச்சுறுத்தியுமிருக்க, பிறரைக்கெடுத்தும் நாம் வாழ விரும்புகிறோம்; பிறரைக் கெடுப்பதினால், நாம் வாழ முடியாதென்பதைத் தெரிந்திருந்தும், பிறரைக் கெடுக்கிறோம்; இதனால் வீம்பும் பகைமையும் வளர்கின்றன. நாமும் கெடுகிறோம். பிறரும் கெடுகின்றனர். உலகிற்கும் நன்மை யுண்டாவதில்லை. பிறரோடு உறவாக வாழ முடியாது போயினும், பகையாக வாழாதேனும் நாமிருக்கப்படாதா?

நாம் நம் குழந்தைகளையும் கவனித்து வளர்க்கிறதில்லை. அவர்கள் தாமாகச் சரியாக

வளர்கிறதுமில்லே. அவர்களிடம் பிறரோடிணங்கிப் போகும் தன்மையும் பிறரை எதிர்க்கும் தன்மையும் (spirit of revolt) அமைந்திருப்பினும் இணங்கிப் போகும் தன்மை சாதாரணமாக வளர்வதில்லே. எதிர்க்கும் தன்மையே அதுவும் அவர்களுடைய கெட்ட சேர்க்கையால் தானே வளரவும் செய்கிறது. நம்முடைய குழந்தைகள் நன்முக வளரவேண்டுமென்ற ஆசையேனும் நமக்கு வேண்டாமா? அவர்களைக் கெட்டுப் போக விடாதேனும் வளர்க்க வேண்டாமா? தீய குணங்களோடு சண்டை போடுந் தன்மை வளரவும் வேண்டும். நன்மையான காரியங்களில் பிறரோடிணங்கிப் போகுந் தன்மையும் வளர வேண்டும். நல்ல குணமான குழந்தைகளோடு நம் குழந்தைகள் பழகிவரும்படி செய்தாலும் போதும். அவ்வளவிலேயே, அவர்கள் தங்களுக்கும் நம் நாட்டிற்கும் ஏற்ற நன்மையான குணங்கள் அமையப்பெறுவார்கள். பின் சந்ததியாரேனும் சரியாக வளராதுபோனல், நம் நாட்டிற்கு விமோசனமே யில்லே.

நாமொவ்வொருவரும் எத்துணே பணமிருந்தாலும், நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டும். அதனல், நமக்குக் குறைவும் வராது; நாம் உழைப்பாளியையும் சரியாக மதிக்க முடியும்.

ஒவ்வொருவருக்கும் உழைக்க வசதியுமிருக்க வேண்டும்; குடும்பச் செலவிற்குப் போதிய பணம் உழைப்பிற்கு ஊதியமாகக் கிடைக்கவும் வேண்டும். உழைப்பிற்கு இடமில்லாதுபோனலும், கிடைக்கும் ஊதியம் குடும்பச் செலவிற்குக் காணுதென்றாலும் சமுகப் பொது அமைப்பாகிய அரசாங்கம் அவர்களுக் குதவ வேண்டும். "தனியொருவனுக் குணவில்லே யென்றல், இவ் வுலகினே யழித்திடுவோம்" என்றார் பாரதியார். உலகை யழிப்பதால் பயனில்லே. ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்க, நாம் முயல வேண்டும்.

விளேவு பெருக வேண்டும்; அதற்கு நல்ல விலேயும் கிடைக்கவேண்டும்; தாய்த் தொழிலாம் உழவில் நல்ல மிச்சம் நாம் காணவேண்டும். அப்பொழுதுதான், பிறதொழில்களும் செம்மையாக நடைபெறமுடியும்; நாட்டிலும், செல்வம் பொழியும்; நிரம்பச் சாவகாசமும் அமையும்; நம் நாடும், உலகம் மெச்ச, பல துறையிலும் முன்னேறிப் போக முடியும்.

பத்திரிகைகளிலும் மேடைகளேறியும் பிறருக் குபதேசம் செய்வது எளிது. நம் நாட்டில், உபதேசங்களுக்குக் குறைவுமில்லே. இப்பொழுது முக்கியமாக வேண்டப்படுவது உபதேசமல்ல; முன் மாதிரியான, காரியமான செய்கையே. நாமொவ்வொருவரும் பிறரோடுறவாகவும் பிறருக்குதவியாகவும் வாழக்கூடும்; அப்படியே வாழவும் வேண்டும்.

நம் மளவில், நாம் பலவேறு பதவிகளேப் பொதுநல ஊழியனுகவே வகித்து வந்திருக்கிறோம்; பிறருக்கு நன்மையாகவும் உழைத்து வந்திருக்கிறோம். என்றாலும் நம் ஆசையின் அளவு நடந்துகொண்டோமில்லேயே யென்று தான் வருந்துகிறோம். சென்ற சில ஆண்டுகளாக இப் பத்திரிகை வேலே தவிர்த்து வேறு காரியமான வேலே செய்து வந்தோமில்லேயே யென்றும் வருந்துகிறோம். நாம் முயற்சிகள் செய்யாதிருக்கவில்லே யென்றாலும், அம் முயற்சிகள் பயன்படாது போனதைப் பற்றித் துயரப்படவே செய்கிறோம்.

பிறரோடு அவசியமான பொழுது சண்டைபோடும் துணிச்சலுடனேயே நம் வாழ்க்கையை ஆரம்பித்தோம். அவ்விதத் துணிச்சலால், மற்றப்படி செய்யக் கூடிய நல்ல வேலேகளுக்கும் தடையேற்படுவதாலும் நேரம் போதாது போய்விடுவதாலும் ஊக்கம் குறைந்து போவதாலும் அவ்விதத் துணிச்சலேயும் குறைத்தே வந்திருக்கிறோம்; ஒழித்துவிட்டோமென்றுமே சொல்லலாம். ஆனல், அதுவும் ஒரு வகையில் பயனற்றதென்றே தெரிகிறது. சில ஆண்டுகளுக்கு முன் விவசாய விருத்தி முறைச் சங்கம் (Agricultural Improvement Society) பதிவு செய்து தர வேண்டுமென்று கேட்டோம். நம் சம்பந்தம்

இருக்கும் வரைக்கே அந்தச் சங்கம் சரியாக வேலை செய்துவரக் கூடும்; அதற்குப் பின்னும் சரியாக வேலை செய்துவர அந்தக் கிராமத்தில் ஆட்களில்லை; ஆகையால், பதிவு செய்து தர முடியாதென்று கூறி விட்டார்கள். சமீபமாகத் தபசில் வகுப்பினர்களிடையில் வேலை செய்து வருவதற்காக ஒரு நல்வாழ்க்கைச் சங்கம் பதிவு செய்து தர வேண்டுமென்று கேட்டோம். அதனால் அரசாங்கத்திற்கேனும் கூட்டுறவு இயக்கத்திற்கேனும் எவ்விதச் சங்கடமுமிருக்கக் கூடியதில்லை. அந்தச் சங்கம் சரியாக வேலை செய்யாது போனாலும், அதிலீடுபட்டவர்களின் சிரமத்தோடு நிற்குமேயொழிய, மற்றப் படி அவர்களையும் கெடுத்து விடாது. அப்படியிருந்தும், அந்தச் சங்கம் நன்றாக வேலை செய்யக் கூடியதில்லையென்றும், ஆதலால் பதிவு செய்து தரமுடியாதென்றும் சொல்லிவிட்டார்கள். அவ்வளவோடு நிற்காமல், நன்றாக வேலை செய்யக் கூடிய சங்கம் ஒன்றைப் பதிவு செய்து தர அவர்கள் முன் வந்திருந்தாலும் அதனை வைத்து இப்பொழுதும் வேலை செய்து கொண்டிருப்போம். அதிகார ஆலோசனைச் சபை போய்,நம்மவர்கள்-எக் கட்சியினராயினும் அதிகாரத்துக்கு வருவதாயிருந்தால், அவர்களோடு சண்டைபோட்டேனும் பின்னடைந்திருக்கும் வகுப்பினர் தபசில் வகுப்பினர்களிடையில் சில வேலைகள் செய்து வரக் கூடுமென்ற நம்பிக்கையுடன் அப்படிக் காலத்தையும் கிராம வாசம் நமக்குச் சாத்தியமாகக் கூடிய காலத்தையும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அறியாமையும் வறுமையுமே நமக்குள் பல வேற்றுமைகளுக்குக் காரணங்களாக இருந்து வருகின்றன. அவற்றை யொழிக்க நாம் நேர் முகமாகவும் சாதி சமய வேற்றுமை பாராட்டாமலும் வேலை செய்து வரவேண்டும். செய்யுள், சித்திரம், சங்கீதம் முதலிய அருங் கலைப் பயிற்சியினால் சிறப்பாகவும் தாய் மொழி இலக்கியப் பயிற்சியால் பொதுவாகவும் நமக்குள் ஒற்றுமை, வெளிப்படையாகத் தோற்றாமலும், வளர்ந்து வரக் கூடும். நந்தாய் மொழியாம் தமிழை வளர்ப்பதில் இந்துத் தமிழருக்கும் மகம்மதியத் தமிழருக்கும் கிறிஸ்தவத் தமிழருக்கும் மாறுபாடிருக்கக் கூடியதில்லை. அதனால், அன்னியோன்னிய நட்பும் நமக்குள் வளரக்கூடும். அதுபோலவே நம் நாட்டுப் பிற தாய்மொழி வளர்ச்சியாலும் நமக்குள் ஒற்றுமை வளரவே செய்யும்.

நாமொவ்வொருவரும் நம் குணக் கேடுகளைத் திருத்தி வரவும் வேண்டும். நம் பொருளாதார நிலைமையைச் செம்மையுறச் செய்து வரவும் வேண்டும். நம் குடும்பங்களும் அறிவிலும் திறமையிலும் பிறருக் குபகாரமாக வாழ்வதிலும் முன்னேறிவர வேண்டும். இப்படிக்கான முன்னேற்ற யோசனைகளையும் வேலைகளையுமே நமது நோக்க மாக முதல் மலர் முதலிதழிலேயே குறித்துமிருந்தோம். அதற்கனுசரணையாகவே இதுவரைக்கும் நடந்து வந்திருக்கிறோம். இன்னும், நம் வாசகர்களும் பிறரும் நமக்கு உதவி ஊக்கப்படுத்தி வரும் அளவிற்கும் அதிகமாகவே சிறப்புற நடந்து வரக்கூடுமென்றும் நம்புகிறோம். நம் வாசகர்களைப் பிறருக்கும் நம் பத்திரிகையை அறிமுகப்படுத்தி நம் பத்திரிகையின் நல்ல கருத்துக்களைப் பரப்புவதற்கு வேண்டியன செய்து வரக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களுக்கும் பிரசுர கருத்தாவுக்கும் நமக்கும் நல்ல சுகத்தையும் தீர்க்காயுளையும் தந்து நமது நோக்கம் தீவிரமாகப் பலிதமாகி வரவும் நம் வாசகர்கள் நல்ல பலனடைந்து வரவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

**தமிழர் தாய்மொழியாகிய தமிழையும் தாய்த்தொழிலாகிய விவசாயத்தையும் வளர்க்கவே பாடுபட வேண்டும்.** ஓர் கிராமவாசி.

4. விவசாயம்:

# நெல்லுக் குரமிடுதல்

## Chapter XI Rice in Madras, By Ramiah

(சாரம்) IV

பசுந்தாளுரம்

உழுந்து பாசிப்பயறு காணம் தட்டாம் பயறு முதலியவற்றின் கொடிகளையும் உரமாக உபயோகிக்கலாம். அவற்றை வயல்களில் மற்றும் பயிர்களோடும் பயிரிடலாம்; பின், அவற்றை மடக்கி உழுது நிலத்தோடு சேர்த்து விடலாம்.

சணல்:—மலையாளம் தவிர, மாகாணம் பூராவும் இது பயிரிடப்படுகிறது. கிருட்டிண கோதாவரி முதலிய தீர வாசங்களில் ஒவ்வொரு ஆண்டிலும் ஏராளமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் அறுப்பதற்குச் சற்று முன்னுக இது விதைக்கப்படுகிறது. 4 முதல் 8 அடி உயரம் வளர்ந்ததும் அறுக்கப்படுகிறது. மேல்பாகம் நல்ல தீவனமாகும். இது விரைவாக வளர்வதால், நெற் சாகுபடி இரண்டிற்கும் ஊடே சொற்ப சாவகாசமே யிருக்குமென்றுலும், இதனைப் பயிரிடலாம். ஆனல் சாகுபடியாகும் நிலம் நீர்ப்பிடிப்பாக இருந்தாலும் வெய்யிலதிகமாக அடித்தாலும் இது தாங்காது. அவசியமானல், இறைத்துத் தண்ணீர் பாய்ச்சக்கூடியதாயும் சௌகரியம்போல் தண்ணீரைக் கழிக்கக் கூடியதாயும் இருந்தால், ஆறு ஏழு வாரங்களில் குழை அதிகமாகவுங் கிடைக்கும். கோயம்புத்தூரில் ஏப்பிரல்-மே மாதங்களில் இரண்டொரு தடவை தண்ணீர் பாய்ச்சி உழுத புழுதியில் விதைத்ததில் இரண்டு மாதத்தில் ஏக்கருக்கு இருபதினுயிரம் முப்பதினுயிரம் இராத்தல் குழை கிடைத்தது. அடித்தண்டு நாராக இருப்பதால் இதனை மடக்கியுழும்பொழுது இது தீவிரமாகவும் அழுகி இதன் சத்து நிலத்தோடு சேர்கிறது. இதில் கம்பளிப் பூச்சியும் வண்டும் விழக்கூடும். ஆரம்பத்திலேயே விழுந்து விட்டால், குழையேகிடையாது போய்விடும். இதனை ஆடுமாடுகள் சாதாரணமாகத் தின்னுமாதலால், அவை விழக்கூடிய இடங்களில் பயிரிடுவதில் பிரயோசனமில்லை. ஏக்கருக்குப் பதினைந்து முதல் இருபது இராத்தல் விதைக்கவேண்டும்.

கொழிஞ்சி:— இது தண்ணீர்த் தட்டிலுமுண்டாகக்கூடும். இது கடுமையாக இருப்பதால், இது நல்ல உரமாகக் கருதப்படுகிறது. இறுக்கமாக இல்லாமல் பொருபொருப்பாகவும் கலப்பு மண்ணுகவுமுள்ள இடங்களில், இது நன்ருகவு முண்டாகிறது. தண்ணீர்க்கட்டை (waterlogging) இது தாங்காது. இது ஆறு மாதம் தரிசாயிருக்கக்கூடிய ஒரு பூ நிலங்களில் நெற்பயிருக்கூடாக விதைப்பதற்கும் ஏற்றது. இதற்கு முளைப்பதற்குத்தான் ஈரம் வேண்டும். பிறகு மழை யில்லை யென்ருலும் தண்ணீ ரிறைவை யில்லாமலும் நன்ருகப் பயிராகும். இது ஆரம்பத்தில் தாமதமாக வளரும். கோடை மழை யிருக்குமென்றுல், நன்ருக வளர்ந்து நிரம்பக் குழையும் விழும். விரைவாக முளைக்கக் கூடிய பயிருகளுடன் கலந்தும் இதனை விதைக்கலாம். இதனை அறுப்பதற்கு முன்னதாக விதையும் முற்றி விடும். இதன் விதையின் மேல்தோல் கடினமாக இருப்பதால் தரைக்குள் முளையாதிருந்து பிறகு நிலம் பயிராகும்பொழுது, நாம் திரும்ப விதைக்கவேண்டிய அவசியமில்லாமலே, தானுக முளைக்கும். கோடையில் மழை அதிகமாகப் பெய்வதனுல் இந்தப் பயிர் மடிந்துபோனலன்றி, மற்றப்படி திரும்ப விதைக்கவேண்டிய அவசியமே வராது. இதனை ஆடு மாடுகள் தின்பதில்லை. ஆதலால், இது வயல் வெளிகளில் வளருவதற்கும் இடைஞ்சல் இருக்கக் கூடியதில்லை.

கொழிஞ்சி விதை இலேசாக முளைப்பதில்லை. அஃது அனேகமாகப் பயிராவதற்குச்

சில ஆண்டுகளேனும் செல்லவேண்டும். அதனை விதைக்கு முன் உரலில் மணலோடு போட்டு இடித்து மேல்தோலை மெல்லியதாக்கிக் கொள்ளுவார்கள். அஃது ஏக்கருக்கு மூவாயிரம் முதல் நாலாயிரம் இராத்தல் குழைதான் தரும்.

திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருசிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு முதலிய தமிழ்ச் சில்லாக்களில் முக்கியமாகவும் கிருட்டிணா, நெல்லூர், குண்டூர் சில்லாக்களிலும் இது பயிரிடப்படுகிறது. ஏக்கருக்குப் பத்து முதல் பதினைந்து இராத்தல் விதைக்கலாம்.

தக்கைப்பூண்டு:— இஃது இறுகிய நிலங்களுக்கும் உவர்நிலங்களுக்கும் ஏற்றஉரமாகும். கோதாவரி, கிருட்டிணா சில்லாக்களின் கடற்கரை யோரங்களில் வேறெந்தப் பசுந்தாளுரப் பயிரும் வளராதபொழுது, இது வளருகிறது. உவரை எடுப்பதற்கும் உதவுகிறது. இது தண்ணீர்த் தட்டையும் தாங்கும். அதிக ஈரிப்பும் இதனைப் பாதிக்காது. இந்தப் பசுந்தாளுரம் விவசாய இலாகாவின் பிரசாரத்தால் பெருகி வருகிறது. கிணறுமுள்ள குளத்துப் பாசன நிலங்களில் செங்கற்பட்டு தென்னாற்காடு முதலிய சில்லாக்களில் இது மிகுதியாகவும் பரவி வருகிறது. இதனைத் தனியாகவும் விதைக்கலாம். கம்பு போன்ற தானியங்களோடு கலந்தும் விதைக்கலாம். தனியாக மே, ஜூன் மாதங்களில் விதைத்து மூன்று மாதங்களுக்குப் பின் சம்பாப் பயிருக்காக நிலத்தோடு உழப்படுகிறது. ஒரு பூ நிலங்களிலும் நெல் அறுவடைக்கு முன்னதாக இதனை விதைக்கலாம். இதனை நெருக்கமாக விதைத்தாலொழிய, அடித்தண்டு மரமாகத் தடித்துப் போகும். ஆதலால், இதனைக் கொஞ்சம் முன்னதாகவே விதைத்து இரண்டு மாதம் குழிகளில் கலப்புரமாக்கி, பிறகு வயல்களுக்கு ஏற்றலாம். ஒரு பூ நிலங்களிலும் நிலங்களை ஏப்ரல், மே மாதங்களில் உழுது விதைக்கலாம். பிறகு தண்ணீர் பாய்ச்சியும் வளர்க்கலாம். நெருக்கியும் காலப் பிற்பாடாகவும் விதைப்பதாலும் ஏக்கருக்கு இருபதினாயிரம் இராத்தல் வரை குழை கிடைக்கும். எப்படிப் போனாலும் எண்ணாயிரம் பதினாயிரம் இராத்தலுக்குக் குறையாது.

இது விசாகபட்டினம், கோதாவரி, கிருட்டிணா, செங்கற்பட்டு, சேலம், மதுரை, பெரியாற்றுப் பிரதேசம் இவற்றிலெல்லாம் பரவியிருக்கிறது.

ஒரு பூ நிலங்களில் பிற பயிர்களோடு விதைத்து ஆறு மாதம்வரை இருக்கிறதென்றால், ஏக்கருக்கு எட்டு முதல் பத்து இராத்தல் விதை போதும். பிந்தி விதைக்கிறதென்றால், இருபது இராத்தல்வரை விதைக்கவேண்டும்.

அவுரி:— இதுவும் கடுத்த செடி. டிசம்பர், சனவரி மாதங்களில் நெல் அறுவடையாவதற்குமுன் ஒரு பூ நிலங்களில் விதைப்பதற்கேற்றது. கொழிஞ்சியைப்போல் இதுவும் ஆரம்பத்தில் வெகு தாமதமாக வளர்வது. பின் கோடை மழையிருந்தால், அடர்த்தியாகவும் நன்றாகவும் வளர்ந்துவிடும். இது சாதாரணக் கலப்புமண் நிலங்களிலும் களிகலப்பு மண்நிலங்களிலும் விருத்தியாகவேண்டும். இது நெடுநாள் பயிராதலால் விரைவாக விளையும். உளுந்து பாசிப்பயறு முதலியவற்றுடனும் கலந்து விதைக்கலாம். பயறு அறுவடையான பின்னும் ஜூன் மாதம்வரை இது நிலத்தில் நிற்கும். இது தண்ணீர்த்தட்டைத் தாங்கக் கூடியது. ஆழமாக வேர் பாய்வது. வெய்யிற் காலத்தில் சௌகரியமாக மழை பெய்யுமென்றால் குழையை வெட்டியெடுத்துக்கொண்டு கட்டையை மறுபடி தளிர்க்கவிடலாம். இந்தக் குழையை நாற்றங்காலுக்கு உரமாகப் போட்டுக்கொள்ளலாம். குளத்துத் தண்ணீர் பாயும் நிலங்களில் கிணறுமிருக்குமென்றால், கிணற்றிறைவையால் கம்பு சாகுபடி செய்யும் பொழுது இதனையும் கலந்து விதைத்துக் கொள்ளலாம். கம்பு அறுவடையான பின் சம்பா நெல் சாகுபடியாகுமுன் கொழுத்த குழையும் தரும். தஞ்சாவூர் சில்லாவில் சில பாகங்களில் இதனைச் சாகுபடி செய்கின்றனர்.

விசாகபட்டினத்தில் எள்ளோடு கலந்து விதைக்கின்றனர்.

கொழிஞ்சி போலவேதான் இதனையும் விதைக்கவேண்டும். அதனைத் தயார் பண்ணிக் கொள்ளுவதுபோலவே இதனையும் தயார் பண்ணிக் கொள்ளவேண்டும். நன்றாக வளர்ந்தால் ஏக்கருக்கு எண்ணாயிரம் முதல் பதினாயிரம் இராத்தல் வரை குழை கிடைக்கும்.

கல்லுப் பயற்றுஞ் செடி:— பத்தாண்டுகளுக்கு முன்தான் கிருட்டிணாவிலிருந்து பிற பாகங்களுக்கு இது கொண்டுவரப்பட்டது. இதன் விதை தின்னக்கூடியது. விரைவாக வளர்வது; எளிதாக மடக்கி யுழக்கூடியது. இதன் குழையை ஆடுமாடுகளும் தின்னும். இதனை எந்தக் காலத்திலும் விதைக்கலாம். விதை ஏராளமாக உண்டாகும். கோதாவரியில் ஒரு பூ நிலத்திலும் இரு பூ நிலத்திலும் சணலோடு கலந்து விதைப்பது இலாபகரமாயிருக்கிறது. இரு பூ நிலங்களில் சணலைத் தீவனத்திற்காக வெட்டியெடுத்துக்கொண்டு இதனை இரண்டாம் போகச் சாகுபடிக்காக மடக்கி யுழுதுவிடலாம். ஒரு பூ நிலங்களில் சணலை யறுத்த பிறகு மார்ச்சு மாதத்தில் இதனைத் தின்னும்படியாக ஆடுமாடுகளைவிட்டு மேய்த்து விடலாம்; பின், ஒரு தண்ணீர் பாய்ச்சினால், அடிக்கட்டை தளிர்த்துச் சூன் மாதம் முதற் போக நெல் சாகுபடி செய்வதற்கு வேண்டிய குழையும் தாராளமாகத் தரும்.

மற்ற இடங்களிலும் ஒரு பூ நிலங்களில் இதனை விதைத்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. நெல் அறுவடையாகுமுன் அதாவது நிலை பயிராக இருக்கும்பொழுதே இதனை விதைத்து விடலாம். காலம் அனுகூலமாக இருந்தால், இதனைத் தீவனத்திற்கு வெட்டிக்கொள்ளலாம். பின் தளிர்ப்பதை நெல் சாகுபடிக்காக மடக்கி யுழுது கொள்ளலாம். இதனைத் பசுந்தாளுரமாகவும் தீவனமாகவும் தஞ்சாவூரிலும், கோயம்புத்தூரிலும் பயிரிடச் சௌகரியங்களுண்டு. தரை விரைவாக உலர்ந்து போகாதென்றாலும் கோடையில் ஒரு தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுவதென்றாலும் மிகவும் அதிகமாகக் குழை கிடைக்கக்கூடும். சௌகரியமாகப் பயிரானால், நல்ல சத்துள்ளதும் எளிதாக நிலத்தோடு மக்கி உரமாகக் கூடியதுமான இந்தப் பசுந்தாளுரம் ஏக்கருக்குப் பதினாயிரம் முதல் இருபதினாயிரம் இராத்தல் வரை கிடைக்கும். பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் நெல் அறுவடையான பிறகு வயலை உழுது விதைத்து ஒரு தண்ணீர் பாய்ச்சக் குழை ஏராளமாகவும் கிடைத்திருக்கிறது. மருதேரில் அதே காலத்தில் விதைத்த சணலையும் தக்கைப் பூண்டையும் காட்டிலும் அதிகமான பசுந்தாளுரம் இது கொடுத்திருக்கிறது. இந்தப் பயற்றுஞ்செடி கூடிய சீக்கிரம் நல்ல உரமாக விளங்கக்கூடும். இதனை உரத்திற்காக விதைப்பதென்றால், ஏக்கருக்கு முப்பது முதல் நாற்பது இராத்தல் வரை விதைப்பது நல்லது.

மற்றப் பசுந்தாளுரப் பயிர்கள்:—மலையாளத்தில் தட்டாம் பயற்றுஞ்செடிதான் வெகுவாக விதைக்கப்படுகிறது. வேறெந்தப் பசுந்தாளுரப் பயிரைக் காட்டிலும் இதுதான் மலையாளத்தில் நன்றாக உண்டாகிறது. ஒரு பூ நிலமானாலும் சரி, இரு பூநிலமானாலும் சரி, நிலத்தை உழுதுகொண்டு இதனை விதைக்கின்றனர். நன்றாகப் பயிரானால், ஏக்கருக்கு எண்ணாயிரம் முதல் பதினாயிரம் இராத்தல் வரை பசுந்தாளுரம் கிடைக்கும். இது வெகு குழைவாக இருப்பதால், நிலத்தோடும் சீக்கிரமாக மக்கி விடும்.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

---

5. கூட்டுறவு:

# கூட்டுறவூழியம்

உலகிற் சிறந்த நாடுகளெல்லாம் அறிவிலும் திறமையிலும் சிறந்தனவாக இருக்கின்றன; உண்மையிலும் உழைப்பிலும் சிறந்தனவாகவு மிருக்கின்றன; இவற்றால் செல்வத்தி

னும் சிறந்தனவாகவே விளங்குகின்றன; ஒழுக்கத்தாலும் சிறக்கும் நாட்டையே நாம் சிறந்த நாடாகக் கொள்ளுகிறோம்.

நம் நாட்டை அறிவிலும் திறமையிலும் சிறந்த நாடாகச் சொல்லுவதற்கில்லை; உண்மையிலும் உழைப்பிலும் சிறந்ததாகக் கருதுவதற்குமில்லை; ஆகையால், செல்வத்தால் சிறந்திருப்பதாகவும் நினைப்பதற்கில்லை. ஒழுக்கத்தாலேனும் சிறந்திருக்கிறோமோ எனின் அதுவும் இல்லை யென்றே சொல்லவேண்டுமெனக் கூட்டுறவியக்கம் நம்மைத் தூண்டுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னாக, பர்மா கூட்டுறவியக்கத்தின் சீர் குலைந்தது; பின் மத்திய மாகாணத்திலும், வங்காளத்திலும், பீகாரிலும், ஒரிசாவிலும் சீர்குலைந்திருக்கிறது. இங்கெல்லாம், அரசாங்கம் பதினாயிரக் கணக்காகப் பணத்தைச் செலவழித்து இயக்கத்தைத் திருத்தி யமைத்துக் கொண்டிருக்கிறது.

நம் மாகாணத்திலும் கூட்டுறவியக்கம் மூன்று குளத்தில் இரண்டு குளம் பாழ்; ஒரு குளம் தண்ணீரே யில்லை யென்ற கதையை அடுத்துத் தானிருக்கிறது. மூன்றிலிரண்டு பங்கு சங்கங்கள் செத்தும் சாகுந்தறுவாயிலுமிருக்கின்றன; இன்னொரு பங்கு சங்கங்களிலும் பெரும் பாகத்தின் வேலை திருப்திகரமாக இல்லை யென்று சொல்லவேண்டும். நம் மாகாண அரசாங்க அறிக்கைகள் கூட்டுறவியக்கம் அவ்வளவு மோசமாகப் போய்விடவில்லையென்று சொல்லினும் புள்ளி விவரங்கள் நம் கூற்றையே ஆதரிக்கின்றன. நாளுக்கு நாள் கெட்டுவருகிற தென்பதை அரசாங்கமும் ஒப்புக்கொள்ளுகிறது; நம் தலைவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், அந்த நிலைமைக்குக் காரணத்தை ஆராய்ந்தறியவேனும் அதனை நீக்கவேனும் கனவிலும் கருதுகிறார்களில்லை. சட்டியிலுள்ளதுதானே அகப்பையில் வரும்; நாடே பலவகையிலும் நாளுக்கு நாள் கெட்டுவரும் பொழுது, கூட்டுறவியக்கமும் கூட்டுறவியக்கத்திற்கு வருபவர்களும் கெட்டுத்தானே யிருக்கக்கூடும் என்பதைத் தெரிந்திருப்பதாயும் சொல்லுவதற்கில்லை.

நாடாகட்டும் தனி மனிதனே யாகட்டும், அறிவிலும் திறமையிலும் பிற பல காரணங்களால் குறைவாக இருக்கக்கூடும். உழைப்பிலேனும் உண்மையிலேனும் ஒழுக்கத்திலேனும் குறைவுபடுவதாக இருந்தால், அதற்குத் தானேதான் காரணமென்று சொல்லவேண்டும்; அப்படிப்பட்ட தனி நபருக்கோ நாட்டிற்கோ விமோசனம் ஏற்படக் கூடியதில்லை.

நம் நாட்டினருக்குப் பொய் சொல்லத் தெரியாதென்று இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னதாக நம் நாட்டைச் சுற்றிப் பார்த்துப் போன மெகசுதீன் (Magasthenes) எழுதி வைத்தார். அதனை மேக்சுமூலர் (Max-muller) காலம்வரை நாமும் பாராட்டி வந்தோம். இப்பொழுது நம்மை யெவரும் குறை கூறினால், அவர் பேரில் நமக்குக் கோபம் வருவதைத் தவிர நம் குறையை யுணர்ந்து நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டுமே யென்ற உணர்ச்சி கூட இல்லாத அளவிற்குக் கெட்டுப் போயிருக்கிறோம். நம் பேரிலும் வாசகருக்குச் சீற்றம் வருமாகில் பக்கத்திலுள்ள பத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் உண்மைச் சரிதத்தைத் தெரிந்துகொண்டு நமக்கு மறுப்பெழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயம் தவறென ஏற்படுமாகில் அதனையும் விவரமாக ஒப்புக்கொள்வதோடு அவருடைய மன்னிப்பையும் கேட்டுக்கொள்ளுவோம்.

நம் நாட்டாரின் உண்மைக் குறைவும் ஒழுக்கக் குறைவும் நம் மனதைப் புண்படுத்தவே செய்கின்றன. ஆதலால், மற்றக் குறைகளை நீக்குவதோடு அவற்றை விசேடமாகவும் முக்கியமாகவும் நீக்கித் தீர வேண்டுமென்றே நாம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அறியாமையும் வறுமையும் பெருகிவரும் நாட்டில் உண்மைக் குறைவும் ஒழுக்கக் குறைவும் பெருகிவரக்கூடுமென்றாலும், இவற்றையேனும் பெருக விடாது குறைத்தாலன்றி அறியாமையையும் வறுமையையும் ஒழிப்பதும் சிரமப்படும். நம் நாட்டில் பெற்றோர்களின்

நடவடிக்கையும் சாதாரணமாகச் சரியாக இருக்கிறதில்லை. குழந்தைகளும் அவர்களுடைய முன் மாதிரியைப் பார்த்தே கெட்டுப் போகின்றனர். பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திலும் ஒழுக்கத்தைச் செம்மையாக அமைத்து வருவதற்கு (Character formation) இடமில்லை. ஆசிரியர்களின் வறுமையும் அவர்களை உற்சாகமாக வேலை செய்ய விடுகிறதில்லை. வீட்டுப் பழக்கங்களினால் கெட்டுப் போயிருக்கும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் திருத்துவதென்றாலும், சாத்தியமாகிவிடுமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அப்படியிருக்க, திருத்தும் முயற்சியும் இல்லை யென்றால் குழந்தைகள் கெட்டுப் போகாது வேறு எப்படி வளர முடியும்? நம் நாடும் நாளுக்கு நாள் கெட்டுப் போகாமல் எப்படி யிருக்க முடியும்?

எழுத்தறியாமையும் வறுமையும் நம் நாட்டை எரித்துச் சாம்பலாக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தும் யாருக்கு வந்த விருந்தோ வென்று சும்மா இருப்பது சரியல்ல. கூட்டுறவியக்கத்தையே திருத்தி அதற்குப்புத்துயிரளிக்கவேண்டும். வறுமைப் பிணியைப்போக்க நாடெங்கும் தீவிரமான முயற்சிகள் கூட்டுறவின் மூலம் செய்ய வேண்டும். அதற்காகப், பல்லாயிரக் கணக்கான கிராம வழிகாட்டிகளும் பயிற்றப்படவேண்டும். வறுமைப் பிணியைத் தீவிரமாகப் போக்கி வருவதோடு எழுத்தறியாமையையும் ஒழுக்கக் குறைவையும் குறைத்து வர வேண்டும்; போக்கிவர வேண்டும். அப்படிக்கெல்லாம் செய்யாதவரை கூட்டுறவியக்கமும் திருந்தாமல் நாளுக்கு நாள் கெட்டேபோகும்.

பொது நன்மையான காரியங்களில் உண்மையாக ஈடுபடுபவர் ஆர்வத்தோடுழைக்கிற மாதிரியாகக் கூலிக்காக உழைக்கிறவர் உழைத்துக்கொள்ள முடியாது. அதுவும் நம் நாட்டின் மாணவர்களின் உண்மையும் வீராவேசமும் வேலை தேடிப் பெறுவதற்குள் இதைந்து சின்னபின்னமாகப் போய் விடுகின்றன. என்றாலும், ஒருவர் தம் பெருமைக்காக அல்லாமல் பொது நன்மை யொன்றையே கருதி உண்மையாக ஈடுபடுபவராயிருப்பினும், அவரும் தமக்குச் சொந்த அலுவல்களில்லாத காலத்தில் சொற்ப நேரமே ஈடுபடக்கூடும். அப்படி ஈடுபடுவதும் ஒரே படித்தாகவேனும் தொடர்ந்தேனுமிருக்கக்கூடு மென்றும் திட்டமாகச் சொல்ல முடியாது. இந்த நிலைமையில் அதிக வேலையுள்ள சங்கங்களிலும் பாங்குகளிலும் சம்பளச் சிப்பந்திகள் நியமித்தேயாக வேண்டும். ஆனால், அப்படி நியமிப்பதில் பரீட்சைத் தேர்வை மட்டும் கவனியாமல் சாரண இயக்கப் பயிற்சி அல்லது விரதச்சாரி இயக்கப் பயிற்சியும் உடையவர்களையே நியமிக்க வேண்டும். அவர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சியுடன் கிராம வழி காட்டிப் பயிற்சியும் (Rural guide) தர வேண்டும்.

கூட்டுறவியக்கச் சிப்பந்திகளின் பயிற்சிக்கு அரசாங்கமும் மாகாணப் பாங்குகளும் பணமுதவவேண்டும். மாகாணப் பாங்கின் தலைவர் அதன் தலைவராகவும் மாகாணக் கழகத்தின் அமைச்சர் அதன் அமைச்சராகவும் தமிழ் நாடு பெடரேசன் அமைச்சரும் அந்திர சம்மேளன அமைச்சரும் அதன் உதவி அமைச்சர்களாகவும் கூட்டுறவுப் பதிவாளரும் மாகாண நில அடைமானப் பாங்கின் பிரதிநிதியும் அதன் உறுப்பினர்களாகவும் இருந்து பயிற்சிக் கல்லூரியை நடத்தி வரவேண்டும்.

கூட்டுறவுச் சிப்பந்திகளும் அந்தந்தச் சங்கத்தால் பாங்கால் நியமிக்கப்படுவதாக இருக்க வேண்டும். ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான சம்பளமும் இடைக் கூடுதலும் (Increments) சேட்டு நிதி உரிமையும் (Provident fund) இருந்து வரவேண்டும். சங்கங்கள் பாங்குகளின் வேலைக்குத் தக்கதாகச் சிப்பந்திகளின் எண்ணிக்கையும் சம்பளமுமிருந்துவரவேண்டும். கூட்டுறவு அரசாங்கச் சிப்பந்திகளின் பயிற்சியும் அதே தரக் கூட்டுறவுச் சங்கப் பாங்கு சிப்பந்திகளின் பயிற்சியும் ஒன்றுபோலாகவே யிருக்கவேண்டும். சிறு

சங்கங்களுக்காக வேண்டுமென்றால், அதற்கும் குறைந்ததரப் பயிற்சி யிருக்கலாம். அரசாங்கச் சிப்பந்திகளைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பாங்குகளிலும் நியமிப்பதென்பதும் நிறுத்தப் படவேண்டும். கூட்டுறவுச் சங்க பாங்குச் சிப் பந்திகளின் கண்டனத்துக்கு (Punishment) மேல் அதற்குமேல் அமைப்பிற்கு ஒரு முறை யீடு (Appeal) செய்து கொள்ளுவதற்கு வசதியு மிருக்கவேண்டும்.

நூறுயிர ரூபாவுக்குமேல் நடை முத லுள்ள (Working capital)வரையறுக்கப் பட்ட சங்கங்களுக்கும் பாங்குகளுக்கும் மூந் நூறுயிர ரூபா நடைமுதலுள்ள நில அடை மான பாங்குகளுக்கும் சம்பள அமைச்சர் நிய மிக்கவேண்டுமென அரசாங்கம் கொண்டு வரும் விதியானது, அத்துணைப் பொருத்த மாகத் தெரியவில்லை. அமைச்சருக்கு வேண்டிய அமைவு (Qualification) இன்னதென்றே னும் சம்பளம் முதலியன இன்னதென்றேனும் கருதிச் சொன்னதாயுமில்லை. இப்பொழுது சம்பள அமைச்சர்களாக இருப்பவர்கள் நிலை மையையும் கவனித்து, அதனையும் பொது விதிக்குள் வரும்படியாகச் செய்வதுபோலவு மில்லை. இந்த விதி அனுட்டானத்திற்கு வந்த தும் இந்த விதியின்படி அமைச்சர்களாக நிய மிக்கக்கூடியவர்கள் போதுமான அளவு இருக் கிறார்களா என்ற விவரமும் கவனித்திருப்ப தாகத் தெரியவில்லை. இவற்றை யெல்லாம் கூட்டுறவுப் பதிவாளரும் மாகாணப் பாங்கு களும் சங்கங்களும் கழகமும் (Union) கவ னித்துச் சங்கங்கள் பாங்குகள் வருவாய்க்குத் தக்கதாகச் சிப்பந்திகளின் எண்ணிக்கை சம்ப ளம் முதலியனவற்றையும் இப்பொழுதுள்ள வர்களையும் கூடியவரை பாதிக்காதிருக்கும்படி திட்டம் செய்ததின்மேல், அரசாங்கம் அதனை ஒரு விதியாகச் சேர்த்துக்கொள்வதே நலமாக இருக்கும். இப்பொழுதுள்ளபடி மொட்டை யாக ஒரு திருத்தத்தைச் செய்வது கூட்டுறவுப் பதிவாளருக்கும் கூட்டுறவுத் தாபனங்களுக் கும் விபரீதங்களை வளர்ப்பதற்கே ஏதுவாகும்.

---

**6. கல்வி:**

# ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

## (சாரம்) IX

## பூகோளம்

அ. முறைகளும் நோக்கங்களும்

பூகோளப்பாடம் வெறும் பேர்களையும் புள்ளி விவரங்களையும் வர்த்தமானங்களையும் தெரிவதற்காக அல்ல; மனித வாழ்க்கையைப் பௌதீக நிலைமை எப்படிப் பாதிக்கிறதென்ப தைக் காட்டுவதற்கேயாகும். இஃது அக்கம் பக் கத்திலுள்ள காரியங்களை நேருக்கு நேராகப் பாட ஆரம்பத்திலேயே காட்டுவதால் நிரம்ப வும் நல்ல விதமாக அமையும்.

பூகோளப்பாடம் படித்த மாணவன் அந் தந்தப் பௌதீகக் கூறுகளும் அவற்றிற் காதர வாக இருப்பனவும் வெப்பதட்ப நிலைமையைப் பாதிப்பதின் அடிப்படையான தத்துவத்தையும் அறிவதற்கான திறமையை அடையவேண்டும். வெப்பதட்ப நிலைமையையும் பயிர்கள் வளர்ச்சி யையும் அங்கங்கே கிடைக்கக்கூடிய கனியப் பொருள்களையும் அறிவதினாலே அங்கங்கே யுள்ளவர்களின் முயற்சிகளை அறிவதும் எளி தாகவேண்டும். ஆசிரியர்கள் பௌதீகப் பொரு ளாதாரப் பூகோளத்தின் அடிப்படையான தத்துவங்களை வழக்கத்தை ஒட்டிக் காட்டு வதற்கும் உதாரணங்கள் எடுத்துச் சொல்லு வதற்கும் சௌகரியமாக மனித முயற்சியை யொட்டியே நாட்டுப் பூகோளத்தை முக்கிய மாகக் கற்பித்து வரவேண்டும்.

கிராமாந்தரக் குழந்தைக்கு வெகு தூரத் திலுள்ள அயல் நாட்டுக் குழந்தைகளை அறி

முகப்படுத்தி வரவேண்டிய அவசியத்தையும் மறந்து விடக்கூடாது. இதற்கெல்லாம் அந் தந்தப்பிரதேச மொழிகளில் நல்ல பாடப் புத்த கங்கள் வேண்டும். அப்படிச் சரியாக விளக் கிக் காட்டக்கூடிய ஆசிரியர்களும் வசதிகளும் அநேகப் பள்ளிக்கூடங்களிலேனும் அமைய வேண்டும். அப்படியானால், ஒரு வேலைத் திட்டத்தையும் வரையறை செய்துகொள்ள முடியும்.

உயர்தர ஆரம்பப்பள்ளியில் பூகோளப் பாட முடிவில் மாணவர்கள் பயிர் வகைகளும் மிருக வாழ்க்கையும் அந்தந்தப் பிரதேச வெப்பதட்ப நிலைமைக்குத் தக்கதாகவே யமைகின்றன வென்றும் மனிதனுக்கு வேண் டிய உணவும் உறைவிடமும் அவனுடைய பழக்கங்களும் அவனுடைய சுற்றுப்புறத்தை யனுசரித்தே யமைகின்றன வென்றும் அமெ ரிக்காவின் ஐக்கிய நாடுகளிலும் ஐரோப்பா வின் கைத்தொழிற் பிரதேசங்களிலும் இருந்து வரும் மாதிரியாக மனிதனும் தன் சுற்றுப் புறத்தை மாற்றிக்கொள்ளக் கூடுமென்றும் தெரிவார்களென்றால், அவ்வளவிற்குக் கொஞ் சம் தெரிந்தவர்களே யாவார்கள்.

கீழ் வகுப்புக்களில் ஆசிரியராக இருக்கும் தனியாசிரியர் இயற்கைப் பயிற்சி ஆட்சிமுறை சரித்திரம் மொழிப்பாடம் இவற்றின் பல வேறு அறிவையும் திறமையாக இணைத்திட வுங் கூடும். பூகோளப் பாடம் சொல்லிவைப் பதில் ஒரு பூகோளத் தன்மைக்கும் இன் னொன்றுக்கும் உள்ள சம்பந்தத்தையும் படித் ததை மறந்து போகாதபடி மாணவர்கள் மன தில் இருத்திவர வேண்டியது அவசியமென்ப தையும் ஆசிரியர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

உயர் வகுப்புக்களில் பலவேறு நாடுகளைப் பற்றியும் படித்த பிறகு எட்டாவது வகுப்பில் நம் நாட்டைப் பற்றி விரிவாகவும் தெரிய வேண்டும். ஒவ்வொரு நாடும் பிறநாட்டை யும் சார்ந்திருப்பதையம் உலகத்தில் நம் நாடு இருக்கும் நிலைமையையும் மாணவர்கள் சரி யாகத் தெரிந்துகொள்ளுவதற்கு அது சௌ கரியமாகவு மிருக்கும்.

பூகோளப் பாடம் சொல்லி வைப்பதற்கு மாணவனின் வீடு அவனுடைய சுற்றுப்புறம் அவனுடைய அக்கறை இவற்றைச் சார்ந்த தாகவே அவனுடைய பாடமும் இருக்கவேண் டும். பின் போகப் போக அவன் தன் நாட் டைப் பிற நாடுகளோடு ஒத்திட்டுப் பார்த்து வரவும் ஒவ்வொரு நாடும் பிறநாடுகளைச் சார்ந் திருப்பதைக் கவனித்து வரவும் வேண்டும்.

### ஆ. அனுபவவேலை

பாடத் திட்டத்தில், ஒவ்வொரு விருத்தி நிலையிலும் செய்யவேண்டிய அனுபவ வேலை இன்னதென்று குறிக்கப்பட்டிருக்கிறது. பாடங்கள் நடக்க நடக்கத் தன்னுேக்க முறை வேலைகளுக்கும் உல்லாசப் பிரயாணங்களுக்கும் பிளான்கள் போடவும் பாடங்களும் மாதிரி களும் தயாரிக்கவும் வேண்டிய அவசியம் வெகு அழுத்தமாக வற்புறுத்தப்பட்டு மிருக்கிறது. பூகோளப் பாடத்தின் ஒரு பாகமாக உல்லாசப் பிரயாணங்களு மிருக்கவேண்டும். குறிப்பிட்ட இடங்களுக்குப் போவதற்கிடையில் மாணவர் கள் கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டியன வற்றை யெல்லாம் ஆசிரியர்கள் முன்னக் கூடியே ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். மாணவர்கள் கேள்வி கேட்டதை ஆதரிக்க வேண்டும். வழி யொழுங்கை (Road safety rules) யனுசரிக்க வேண்டும். உல்லாசப் பிர யாணத்திற்குப் பின்னதாக வகுப்புக்களில் அவற்றையொட்டிச் சர்ச்சைகளும் செய்யப்பட வேண்டும். கற்கள் இலைகள் விதைகள் மற் றும் அக்கறை கொள்ளக்கூடிய மாதிரிப் பொருள்கள் இவற்றைச் சேகரிப்பதற்கும் போதுமான நேரம் கொடுக்கவும் வேண்டும்; உற்சாகப்படுத்தவும் வேண்டும்.

இந்த மாதிரியாக அந்தந்தப் பிரதேசத் திற்குத் தக்கதாக உல்லாசப் பிரயாணங்களை யமைத்துக்கொள்ளவேண்டும். முன்னக்கூடியே அதாவது பள்ளிக்கூட வகுப்பு ஆரம்பிக்கும் காலத்திலேயே இன்னின்ன இடத்திற்கு இன்

னின்ன காலம் போவது உசிதமாயிருக்குமென்றும் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

இ. உதவிகளும் கரணங்களும்

ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் குறைந்த பட்சம் அடியிற் கண்டபடியேனுமிருக்கவேண்டும்.

1. உலகம், இந்தியா, மாகாணம், சில்லா, தாலுகா இவற்றின் படங்கள்; கிராமப் பிளான், பூகோள உருண்டை (Globe).

2. சந்தை, துறைமுகம், கால்வாய், இயற்கைக் காட்சிகள், கடல்கள் இவற்றின் படங்கள்; மழையளக்கும் கருவி; காற்றுத் திசைகாட்டி; தேசப்படப் புத்தகம் (Atlas).

ஈ. பெண்களுக்குத் தையல்வேலை உட்பட்ட வீட்டு வேலையும் சுகாதாரமும் ஆட்சி முறையும்

அனுபவ வேலையின் தன்மையும் நோக்கங்களும் முறைகளும் பாடத்திட்டத்திலேயே குறிக்கப்பட்டிருக்கின்றன. நாலாவது வகுப்புப் பாடத்திட்டத்தில் வழி ஒழுங்கைப் பற்றிய பாடங்கள் குறிக்கப்பட்டிருப்பினும் அதற்கு முன்னதாகவே அந்தப் பாடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கெல்லாம் குறிக்கப்பட்டிருக்கும் பாடத்தோடு பெண்களுக்கு வீட்டு வேலையும் கற்பிக்கப்பட வேண்டும். அதற்கு முன்னதாக, கீழ் வகுப்புகளிலும் தையல் வேலையும் சமையல் வேலையும் கொஞ்சங் கொஞ்சம் கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(தொடரும்.)

---

## 7. கைத் தொழில்: குடிசைத் தொழில்

# தீப்பெட்டியைக் குடிசைத் தொழிலாகவும் செய்யலாம்

M. Ramanand, Gandhi Ashram, Hosaritti (Karnatak)

தீப்பெட்டி செய்யப் பச்சை மூங்கில் வேண்டும். மூங்கில் காய்ந்திருப்பினும் தண்ணீரில் நனைத்துக்கொள்ளலாம். அப்பொழுது அதனை எளிதாக வேண்டுமளவிற்கு வெட்டிக்கொள்ளவுங்கூடும். அதற்கு யாதொரு எந்திரங்களும் வேண்டியதில்லை. சாதாரணக் கத்திகளும் இரம்பங்களும் சிறு கோடரிகளும் குச்சிகளாக்குவதற்குப் போதும்.

குச்சிகளை எரியக் காடியில் (Phosphoric Acid) முக்கியெடுப்பதால், அவை அதில் இலேசாக ஊறியும் விடுகின்றன. அப்படி முக்கிய முனையை மெழுகங் (Paraffins) களில் முக்கிக் கொள்ளுவதால் அந்த முனையில் பிடிக்கிற தீ நின்று எரியவும் மேலும் தொடர்ந்தெரியவுங் கூடும். மூங்கில் கெட்டியாக இருப்பதால் குச்சிகளாகப் பிளக்கும் போதாவது அவற்றை முக்கும் பொழுதாவது பின் கீச்சும் பொழுதாவது அதிகமாகச் சேதமாவதில்லை. அது தொழிற்சாலைகளில் செய்யப்படும் தீக்குச்சிகளைக் காட்டிலும் நின்று மெதுவாக நீண்ட நேரம் எரியும். அந்தக் குச்சி காடு மூராடாகவுமிருப்பதால் எரியக் காடியும் மெழுகமும் கெட்டியாகவும் நிற்கின்றன; அவை விழுந்து விடக்கூடுமென்ற பயமும் வேண்டியதில்லை. இப்படியாக, ஆலையில் செய்யப்படும் குச்சியைக் காட்டிலும் ஒவ்வொரு வகையிலும் குடிசையில் செய்யுங் குச்சி சிறந்ததாகவும் திருப்திகரமானதாகவு மிருக்கும்.

ஆலைகளில் தீப்பெட்டி மரத்தால் செய்யப்படுகின்றது. குடிசைகளில் கழிவு காகிதத்தாலும் செய்துகொள்ளலாம். நான்கு காகிதங்களை ஒன்றன்மேல் ஒன்றாக ஒட்டிவிட வேண்டும். அளவின்படி மடித்து ஒட்டிக்கொள்ள

லாம். இதுவும் போதிய அளவு தடித்திருக்கும். தீப்பெட்டியாகவும் நன்றாக உதவும்.

சிறு பையன்களும் பெண்களுங்கூட வேலை செய்யலாம். 20, 25 பேர் சேர்ந்து வேலை செய்வதாக இருந்தால், தினசரி இருபது குரோசும் செய்து முடிக்கலாம்.

தீக்குச்சி செய்வதில் கழிவாகும் மூங்கிலையும் காகிதம் செய்ய உபயோகிக்கலாம்.

(சாரம்) Rural India.

---

**8. அ. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை**

# குழந்தைகளைக் கீழ்ப்படியப் பழக்கவேண்டும்

ஆறு மாதத்தில் பிள்ளைகள் மண் தின்ன ஆரம்பிப்பார்கள். பிடிவாதம் பத்து மாதத்திலேயே தலைகாட்டிவிடுகிறது. கீழ்ப்படிதலும் பத்துப் பன்னிரண்டு மாதத்திற்குள் பாடமாகிவிடவேண்டும்.

கீழ்ப்படிதலே வழக்கமாய்ப் போய்விடும்படி செய்யவேண்டும். பிள்ளைகளிடத்தில் பல பழக்க வழக்கங்களை உண்டாக்குவதே பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதாகும். பாலியத்தில் அவர்கள் பழகும் பழக்கங்களை ஒருபோதும் கைவிடார்கள். பெற்றூர் ஏதாகிலும் சொன்னால் "மாட்டேன்" என்று சொல்லும் சொல்லல்ல, "ஆகட்டும்" என்ற சொல்லே பாடமாகிவிடவேண்டும். இவ்விதப் பழக்கத்தை யுண்டாக்கவேண்டுமாகில், ஒரு தடவையாகிலும் பிற நடைக்கு இடங்கொடுக்கக்கூடாது. ஒரு தடவை விட்டுவிட்டால் பழக்கம் உண்டாகவே மாட்டாது. ஆகவே இச்சிறு பிராயத்திலுங்கூட ஒரு தடவையாகிலும் கீழ்ப்படியாமை காட்ட விடப்படாது. ஒரு சமையத்தில் கீழ்ப்படிந்து அடுத்த சமையத்தில் அதே காரியத்தை மீறும்போது கண் சாடையாய் இருக்கக்கூடாது. பாலியத்திலேயே எப்போதும் கீழ்ப்படியச் செய்வோமானால், கீழ்ப்படிதலே பிள்ளைகளுக்கு இயல்பும், பழக்கமுமான சுபாவமாகிவிடும். கீழ்ப்படியக் கீழ்ப்படிய, கீழ்ப்படிதலே அவர்களுக்குப் பிரீதியாகிவிடும்.

கீழ்ப்படியத்தக்க கட்டளை மாத்திரம் கொடுக்கவேண்டும். ஒரு கட்டளை கொடுக்கும் முன்னதாக அதனை அப்பிள்ளை செய்யக்கூடியதா என்றும், செய்யாவிட்டால் தண்டிக்க ஆயத்தமாயிருக்கிறோமா என்றும் கவனித்தே கட்டளையிடவேண்டும். ஒரு பிள்ளை ஏங்கி ஏங்கி அழும்போது அதனை நிறுத்தச் சொல்லுவதில் பயனில்லை. போசனத்தின் பேரில் பிரீதியற்ற பிள்ளையைப் போட்ட சாப்பாடு முழுவதையும் தின்று முடிக்கச் சொல்லுவது வீண்.

வாக்குத் தவறக்கூடாது. அடிப்பேன் என்று சொன்னால், அடியாமல் விடக்கூடாது. அடிக்கிற அடியும் பிள்ளைக்கு உறைக்கத் தக்கதாயிருக்கவேண்டும். இனும் தருவேன் என்று சொன்னால் திட்டமாக அதனைக் கொடுத்துவிடவேண்டும். தாய் தகப்பன் வாக்குத் தங்கம் என்பதைப் பிள்ளைகள் அறியவேண்டும். பிள்ளைகள் பயப்படாமல் அடிக்கடி கீழ்ப்படியாதிருப்பதற்கு இதுவே காரணம். சாப்பாடு தரமாட்டேன், பலகாரம் தரமாட்டேன் என்று தாய்மார்கள் கோபத்திலே இலேசாய்ச் சொல்லிவிடுகிறார்கள். மற்றவர்கள் சாப்பிடும் நேரத்தில் அந்தப் பிள்ளைகளுக்கும் கிடைத்தே விடுகிறது. ஆகவே பிள்ளைகள் பயப்படுகிறதில்லை. அம்மா இப்படித்தான் சொல்லுவார்கள், அப்பால் கொடுத்துவிடுவார்கள் என்று நினைத்துக் கொள்ள இடம் பண்ணிக்கொள்ளுவோமாகில், பிள்ளைகள் எவ்வாறு கீழ்ப்படிவார்கள்?

தண்டிக்கப் பயப்படக்கூடாது. எடுத்ததற்கெல்லாம் அடிப்பது நல்லதல்ல. ஆனால், பிரம்பைக் கையாடாமலிருப்பதும் பிள்ளைக்குத் தீமையே. கையினால், ஒருபோதும் அடிக்கக்கூடாது. கோபத்தோடு அடிக்கவும்

கூடாது. சாந்த வார்த்தைகளுடன், பிள்ளை செய்த தப்பிதத்தை உணர்த்திக் காட்டி, சிறு பிரம்பினால் பிள்ளையின் கண்ணீரைக் கவனியாமல், மிகுந்த அன்புடன் அடிக்கவேண்டும். இவ்வாறு செய்தால், அடிக்கவேண்டிய அவசியம் இரண்டொரு தடவைக்குள் முற்றிலும் நின்றுபோம் என்று காணலாம்.

திடமனது வேண்டும். கீழ்ப்படியும் வரை விடாத மன உறுதி அவசியம். ஒரு கட்டளை கொடுத்து அதற்குப் பிள்ளைகள் கீழ்ப்படிகிறார்களா இல்லையா என்று கவனமாய்ப் பாராவிடில் கட்டளை கொடுப்பதில் பயனில்லை. செய் என்று சொல்லப்பட்ட ஒரு வேலையைச் செய்தாலொழிய விடப்படாது. பிள்ளை செயிக்கப் போகிறதா, பெற்றோர் செயிக்கப் போகிறார்களா என்பது ஒரே நாளில் விளங்கவேண்டும். ஒரு வயதுப் பையன் ஒருவனைச் சுக்குக் கசாயம் குடிக்கச் சொன்ன போது பையன் மாட்டேன் என்றான். தகப்பனார் பிரம்பு கொண்டு வந்து ஒரு அடி அடித்தார். இன்னும் குடிக்க வில்லை. மறுபடியும் அடித்தார், திரும்பவும் குடிக்க மாட்டேன் என்றான். அப்பால் தானே வாங்கிக் குடிக்குமட்டும் வலி உண்டாகத்தக்கதாக அடித்துக் கொண்டேயிருந்தார். குடிக்காமல் வேறே வழியில்லை என்று கண்ட பையன் உடனே குடித்தான். அது முதல், மருந்து குடிப்பதைப் பற்றி ஒரு நாளும் சங்கடமிருக்கவில்லை. அன்றோடே தகப்பனார் செயித்தார். பையன் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டான்.

சரியான கீழ்ப்படிதலை எப்போதும் எதிர்பார்க்கவேண்டும். உடனே கீழ்ப்படிய வேண்டும். இரண்டு மூன்றுதரம் சொன்ன பின் அல்ல, முதல் தடவையிலேயே கீழ்ப்படியச் செய்ய வேண்டும். வா என்றால் உடனே வரவும் போ என்றால் உடனே போகவும் பழக்குவது மிகவும் அவசியம்.

உற்சாகமாய்க் கீழ்ப்படிய வேண்டும். முணுமுணுப்புடன், கோணல் முகத்தைக் காட்டி, வெறுப்புடன் கீழ்ப்படிவது கீழ்ப்படிதலல்ல. சகல வித முணுமுணுப்பையும் முகத்தைத் திருப்புவதையும் சிறு பிராயத்திலேயே நிறுத்த வேண்டும்.

நல்வழி.

[அடுத்த இதழில் மற்றொரு பெரியாரின் (Barbara Staunton: Teaching the child to be obedient.) கருத்தை மொழிபெயர்த் தெழுதுவோம்.]

# ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

## I. பூசுணைக்காயின் குணம்

அனல் அழலை நீக்கும் அதிபித்தம் போக்குங்
கனல் எனவே வன்பசியைக் காட்டும்—புனல் ஆரும்
மிக்கஐயம் உண்டாக்கும் மென்கொடியே!எப்போதும்
சர்க்கரைப் பறங்கிக்காய் தான்.

அகத்தியர் குணவாகடம்.

அனலால் வரும் அழற்சியையும், பித்தத்தையும் நீக்கும், நல்ல பசியையும் கபத்தையும் விளைவிக்கும்.

## தடிமன் வராமல் பாதுகாக்க

II. 1. தேகதிடனை முதல் தரமான நிலையில் வைத்துக்கொள். சத்து நிறைந்த ஆகாரத்தைக் கிரமமான காலங்களில் சாப்பிடு. செரிப்பதற்குச் சிரமமான பதார்த்தங்களைச் சாப்பிடாதே. பாலையும் பாற் பண்டங்களையும் பழங்களையும் தாராளமாகச் சேர். நித்தம் ஏழெட்டுத் தமிளர் தண்ணீர் குடி.

2. கால நிலைக்குத் தக்கதான உடைதரி. தேகம் திடீரென்று குளிரவிடாதே. அனாவசியமாகக் குளிர் காற்று மேலே படும்படி வைத்துக்கொள்ளாதே. மழையில் நனைந்தால் உடனே ஆடையை மாற்றிக்கொள்.

3. ஒவ்வொரு நாளும் கொஞ்ச நேரமாவது வெளிக் காற்றில் நின்று தேகாப்

பியாசம் செய்யக்கூடிய அளவு சூரிய வெளிச்சத்திலும் வெய்யிலிலும் இரு. நீ பொழுதுக்கும் நாற்காலியில் குந்திக்கொண்டு வேலை செய்கிறவனாக இருந்தால், தினம் இரண்டு மூன்று தடவை சன்னலருகில் நின்று ஆழ்ந்து சுவாசி.

4. போதுமானபடி தூங்கு. உல்லாசமாக இரு; ஆனால், மிதமிஞ்சிப் போகாதே. சுகத்தைக் கெடுக்கிற அளவில் உன் போது போக்குகளிலும் போகங்களிலும் ஈடுபடாதே.

5. தடிமன் ஆள் விட்டு ஆள் பரவுவது, மூக்கிலிருந்தும் தொண்டையிலிருந்தும் வருகிற சளியினால் தான். இருமுகிற போதும் தும்முகிற போதும், தடிமன் கிருமிகள் நிறைந்த சளி வெளிப்படுகிறது; ஆகையால் தடிமன் பிடித்திருக்கிறவர்களை நெருங்காதே.

6. உனக்குத் தடிமன் பிடித்திருக்கும் பட்சத்திலும் புறத்தியாருடன் அனாவசியமாகப் பழகாதே. உன்னுடைய வியாதியை நீ அவர்களுக்கும் ஏன் தொற்றவைக்கவேண்டும்?

நல்வழி.

(இரவில் படுக்கப் போகுமுன், ஒரு அவுணம் தேனில் ஒரு அவுணம் தண்ணீரைக் கூடுமானால் வெந்நீரைச் சேர்த்துக் குடிக்க, இரண்டொரு நாட்களில் தடிமன் தீர்ந்துபோகும்.

ப-ர்.)

2. மழைகால இருமல்: கோடை காலத்தில் வெயர்வையினால் சளிப்பிடித்து உண்டாகும் இருமலைவிட மழை காலத்திலும் பனி காலத்திலும் உண்டாகும் இருமல் அதிக உபத்திரவத்தைக் கொடுக்கக்கூடும். முதலில் சாதாரண தடிமனாக ஆரம்பித்து, அது சரியாய்க் கவனிக்கப்படாவிட்டால், தொண்டைப் புண் நெஞ்சுவலி இலேசான காய்ச்சல் (90° அல்லது 100°) இவற்றுடன் மூச்சுவிடச் சிரமமும், இருமலும் உண்டாகும். சளியானது கட்டியாயும், மஞ்சளாயும் பிசின்போலுமிருக்கும். இரவில் கதவுக்கு நேரே அல்லது சன்னல் ஓரத்தில் படுத்திருப்பதனாலும் திடீரென இருமல் உண்டாகும்.

தூதுவேளை, கண்டங்கத்தரி, ஆடாதோடை இலை வகைக் கொருபிடி விகிதம் இடித்துப் பிட்டவியலாக அவித்து, சாறு பிழிந்து அதில் சுக்கு மிளகு திப்பிலி வகைக்கு ¼ பலம் பொடித்துத் தூவி, கொஞ்சம் தேன் விட்டு 2 அவுணம் சாப்பிடத் தீரும்.

சத்திய போதினி.

L. R. Fernandez.

III. 1. மருந்துச் சரக்குகள் நோயின் குணங்களையே நீக்கும்; தற்காலிகமாகவே சுகந்தரும்; அவை உண்மையில் வியாதியின் காரணங்களை நீக்குவதில்லை; வியாதியைச் சுகப்படுத்துவதுமில்லை.

நாகரிகம் நமக்கு அநேக வசதிகளையும் சௌகரியங்களையும் தந்திருக்கிறதென்பது உண்மைதான்; ஆனால், அது மிகுந்த தீங்கும் விளைவித்திருக்கிறது. நம்மில் அனேகர் எப்பொழுதும் நிரம்ப அவசரமாகப் படபடப்பாக, ஓட்டசாட்டமாகவே திரிகிறோம். இஃதொரு பெருங்கேடு. பெரிய பட்டினங்களில் அடைபட்டுக்கிடக்கிறோம். இது மற்றொரு பெருங்கேடு. நாம் அடிக்கடி திறந்த வெளிகளுக்கு, காடுகளுக்கு, நாட்டுப்புறத்துக்குப்போய் இயற்கையின் அழகைக் கண்டு ஆனந்திக்க வேண்டும். இயற்கையோடு ஒன்றுபடவேண்டும். வைத்தியர் இயற்கையாருடைய மருந்துகளே கைகண்ட மருந்துகள். அவற்றால் கோடிக்கணக்கான பேர்கள் நன்மையடைந்திருக்கிறார்கள். அவற்றை நீங்களும் பயமின்றி உபயோகிக்கலாம்.

நான் இப்பொழுதுதான் என்னுடைய வைத்தியரிடத்திற்குப் போய்விட்டு வந்திருக்கிறேன்; அவர் இலேசுபட்டவரல்ல. அவரிடத்தில் போய்விட்டு வருகிற ஒவ்வொரு தடவை எனக்குப் புத்துயிர் வந்தமாதிரி இருக்கும். என்னுடைய வைத்தியரிடத்தில் அடிக்கடியும் ஒழுங்காகவும் போய்வருவது நல்லது. நல்ல சுகமாக இருக்கும்பொழுதுகூடப் போகவேண்டும். அவர் இருக்கிற சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், இன்னும் அதனை அபிவிருத்தி செய்யவும் நிரம்பவும் உதவுவார். என்னுடைய வைத்தியரிடத்திலே போனால், உங்களுடைய வைத்தியர் கோபித்துக் கொள்ளுவார் என்று பயப்படாதேயுங்கள். அப்படி

யல்ல. என்னுடைய வைத்தியர் இருக்கிறாரே, அவர்மேலே எல்லா வைத்தியர்களுக்கும் நிரம்பப் பிரியம், அபிமானம். அவரிடத்திலே போகிறதற்கு ஒருவரும் வருத்தப்படமாட்டார்கள். அவர் அதிகப் பணமும் கேட்கமாட்டார்; அதிகப் பணமென்ன ? அவர் பணமே கேட்கமாட்டார். அவர் கேட்பதெல்லாம் கொஞ்ச நேரமும் கொஞ்ச மனமுந்தான். அவருடைய விலாசம்—அதனைச் சொல்லுவது கொஞ்சம் சிரமம்; என்றாலும் அவரிடத்திலே போகிறதற்கு வழி சொல்லித் தருகிறேன். உங்களுடைய வீட்டிலிருந்து புறப்பட்டுப் போங்கள். ஊரைக் கடந்து, காட்டைச் சேர்ந்தவுடன் நில்லுங்கள். உங்களைச் சுற்றிலும் விதவிதமான மரங்கள் நிற்கும். அழகான பூக்கள் பூத்திருக்கும். சுகமான காற்றடிக்கும். பறவைகள் பாடும். சரியாய் அதுதான், என்னுடைய வைத்தியர் இருக்குமிடம் — இயற்கையுலகம்.

நல்வழி.

2. கோத்துக் கீரை:—கீரையை முதலாவதாகப் பொடியாக அரிந்து தண்ணீரில் அலசி எடுத்துக் கொள்ள வேண்டும். கீரையிலேயே தண்ணீரிருப்பதால் கொஞ்சமாகவே தண்ணீர் விட்டிருக்கும் வாயகன்ற சட்டியில் அதனைப் பொத்தி யமுக்கி உப்பும் போட்டுத் தீயை மடமட வென்றெரிய விடாமல் இலேசான சூட்டிலேயே வேக வைக்கவேண்டும். வெந்ததும், வெந்த பருப்பும் சீரகமும் போட்டுக் கலக்கிக் கொள்ளவேண்டும். மிளகாய் வற்றலையும் கடுகையும் கொதிக்கிற எண்ணெய்யில் போட்டுக் கடுகு பொரியவும் எடுத்து அதனையும் கலந்துகொள்ளவேண்டும். அதற்கு மேல் தக்காளிச் சாறேனும் எலுமிச்சம் பழச் சாறேனும் ஊற்றி உண்ணலாம்.

கீரையடை:—இரண்டு கோப்பையரிசிக்கு ஒரு கோப்பைத் துவரம் பருப்பாகச் சேர்த்து நனையப் போட்டு அவற்றைக் களைந்து தண்ணீரை வடித்துவிட வேண்டும். கொஞ்சம் உப்பும் பச்சைமிளகாயும் ஈருள்ளியும் அதில் போட்டு எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து மாவாக்கிக் கொள்ள வேண்டும். பொடியாக அரிந்த கீரையையும் போட்டுக் கலந்துகொள்ள வேண்டும். அதன் மேல் இருப்புச் சட்டியில் எண்ணெய் கொஞ்சமாக ஊற்றி மாவை அடையாகத் தட்டிப் போட்டுச் சுற்றிலும் எண்ணெய் ஊற்றியும் புரட்டிப் போட்டும் தவிட்டு நிறமாக வரவும் எடுத்துத் தின்னலாம்.

கீரைவடை:—இரண்டு கோப்பை உழுந்தைத் தண்ணீரில் ஊறப் போட்டுக்கழுவித் தண்ணீரை வடித்துவிட்டு நான்கு பச்சை மிளகாயும் உப்புஞ்சேர்த்தரைத்துக் கூழாக்கிக்கொள்ள வேண்டும். இரண்டு கைநிறைய அரிந்த கீரையையும் ஈருள்ளியையும் அதனோடு நன்றாகச் சேர்த்து மதித்துக் கொள்ளவேண்டும். பின் வடையாகத் தட்டி நன்றாகக் கொதிக்கிற எண்ணெய்யில் போட்டுத் தவிட்டுநிறமாகும் வரை வெந்ததும் சுடச் சுடத் தின்னலாம்.

மெயில்.

---

## 9. கிராம முன்னேற்றம் :

# கிராமப் பஞ்சாயத்து மசோதா

(தலதாபன அமைச்சர்க்கனுப்பிய குறிப்பின் மொழி பெயர்ப்பு)

பணமில்லாத சீர்திருத்தத்தால் பயனில்லை. நிருவாகம் விருத்தியாகிக்கொண்டே போக வேண்டு மென்றால், சனங்களின் சௌகரியத்தை அதிகப்படுத்திக் கொண்டுமிருக்க வேண்டு மென்றால் வரவும் அதிகப்பட்டுக் கொண்டே போகவேண்டும். நம் மாகாணத்திய நிலவரி அதிகமென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அது காரணமாக அரசாங்கம் வருடந்தோறும் தீர்வை வசூல் செய்தும் வருகிறது. ஆகையால், இப்பொழுது நிலவரியை யொட்டி வசூலித்து வரும் மேல்வரியை (Cess) அதிகப்படுத்த வேண்டு மென்

பதற்கும் அருத்தமில்லை. அப்படி அதிகப் படுத்தினாலும், பஞ்சாயத்துக்களின் நிருவாகத்துக்கு வேண்டிய பணம் சேர்ந்துவிடாது.

நம் நாட்டு நிலவரியை நிகரவரவின் நாலிலொரு பங்காக எங்கும் ஒரே மாதிரியாகக் குறைத்துவிட வேண்டுமென்றும் அப்படிக் குறைக்கப்படுமென்றால், நிலவரியில் கால்வாசி வரை தலதாபனங்கள் தங்களுடைய செலவுக்காக வரி விதித்துக்கொள்ளக் கூடுமென்றும் அவை தாங்கள் தனித்துச் செய்யும் விருத்திகளுக்காகவும் விசேடத் தீர்வை விதித்துக் கொள்ளக் கூடுமென்றும் நம்மிந்தியத் தீர்வை விசாரணைக் கழகம் (Taxation Enquiry Committee) சிபார்சு செய்தும் பதினைந் தாண்டுகளுக்கு மேலாகின்றன. இதுபற்றி அரசாங்கம் இதுவரை யாதொன்றும் செய்ததாக இல்லை.

சொர்மனியில், நிலத்தீர்வை வசூல் பூராவும் தலதாபனங்களுக்கே கொடுத்துவிடப் படுகிறது. இங்கிலாந்திலும் நிலவரியின் பெரும் பாகம் அப்படியே கொடுக்கப்படுகிறது. ஆகையால், நம் மாகாணத்திலும் சீக்கிரமாக நிலவரியின் ஒரு பாகத்தை வருடந்தோறும் கூட்டிக் கொண்டும் போகும்படியாகக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கிவர வேண்டியதும் அவசியமாகவும் நியாயமாகவுமிருக்கிறது.

அரசாங்கமும் தங்களுக்குத் தாங்களாகவும் உதவிக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் உதவி செய்துவர முடியும். வரிப்போட்டுக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் அரசாங்கமும் உதவிவர முடியுமென்பது அரசாங்கக் கொள்கையாக இருந்துவரலாம். ஆகையால், சனங்களுக்குச் சாதாரணமாகப் பிடித்தமிராத வீட்டுத் தீர்வையையும் வசூலித்துத்தான் தீர வேண்டுமென்ற கட்டாயம் வேண்டாம். (பஞ்சாயத்துக்கள் தாங்களாகவே வீட்டுத் தீர்வையையும் விதித்துக்கொள்ளும்படி விட்டு விடலாம்.)

அரசாங்கம் பஞ்சாயத்துக்களை மேற்பார்த்து வருவதற்கும் அவற்றிற்கு யோசனை சொல்லியும் அடக்கியும் அவற்றை ஆண்டுவருவதற்கும் செலவாகும் தொகைகளையும் பஞ்சாயத்துக்கள் அரசாங்கத்துக்குக் கொடுத்துவர வேண்டுமென்று கேட்பதும் நியாயமில்லை. ஆரம்பக் கல்வியும் முதியோர் கல்வியும் வாசகசாலையும் பஞ்சாயத்துச் செலவுகளில் கட்டாய இனங்களாக இருக்கவேண்டும்.

பஞ்சாயத்துக்கள் வேண்டுமென்று கேட்கப்படும் இடங்களில்தான் அவற்றைத் தாபிப்பதென்றிருப்பதும் போதாது. போதிய வரவிருக்கக் கூடுமென்பது தெளிவாகத் தெரிய வேண்டும்; அல்லது அதற்குச் சரியான உறுதியேனும் பெறவேண்டும்; அப்படியிருந்தால் மட்டுமே தாபிக்கவேண்டும்.

அனேக கிராமங்களில், கட்சிக்குக் கிராம அதிகாரிகளே முக்கியப் பொறுப்பாளிகளாக இருக்கவுங்கூடும். அப்படியிருக்க, அவர்களை அவர்களுடைய அதிகார தோரணையையொட்டியே எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் உறுப்பினர்களாகவும் நிருவாக அதிகாரிகளாகவும் புகுத்துவதினால் கட்சிகள் குறைந்திடமாட்டா.

சாதாரணமாக, கிராம அதிகாரிகளுக்கு அவர்கள் செய்துவிடக்கூடிய சேட்டைகளுக்காகப் பயப்படுவதுபோல, அவர்களுக்கு மரியாதையிருப்பதில்லை. கிராமக் கர்ணங்களுடைய அதிகாரங்கள் கிட்டத்தட்ட எந்தக் கிராமத்திலும் ஒன்றுபோலவேயிருக்கின்றன. கிராமப் பெரிய தனக்காரர்களின் அதிகாரங்கள் அந்தந்தக் கிராமத்தில் வசிக்கும் சனத்தொகையைப் பொறுத்ததாகவேயிருக்கிறது. அனேகமாகக் கிராமப் பெரியதனக்காரருடைய சம்பளத்தைக் காட்டிலும் கிராமக் கர்ணத்தினுடைய சம்பளம் அதிகமாகவேயிருக்கிறது. அனேக கிராமங்களில் கிராமப் பெரிய தனக்காரர்களைக் காட்டிலும் கர்ணங்கள் அதிகப் பணக்காரர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவுமிருக்கிறார்கள். ஆகையால், சம்பளத்தையும் செல்வத்தையும் ஒட்டியே மரியாதையும் செல்வாக்கும் ஏற்படுகிற இந்தக் காலத்தில் அவர்களுக்குள் கிராமப் பெரிய தனக்காரர்கள்

கர்ணங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களெனக் கொள்ளுவதற்கு அதிக இடமுமில்லை. இருவரும் அரைகுறை நேர (Part-time) அதிகாரிகளாகவே யிருக்கின்றனர். ஆகையால், அவர்களில் எவரையுமே சம்பளம் கொடுப்பதாக இருந்தால் சிறு பஞ்சாயத்துக்களுக்கு நிருவாக அதிகாரியாக நியமித்துக்கொள்ளலாம். கிராம வழிகாட்டி (Rural guides)ப் பயிற்சியும் சிலருக்குத் தந்து அவர்களையும் சிறு பஞ்சாயத்துக்களுக்கு நிருவாக அதிகாரிகளாக நியமித்துக்கொள்ளலாம்.

சிறு பஞ்சாயத்துக்களிலாகட்டும், பெரிய பஞ்சாயத்துக்களிலாகட்டும்; கிராம அதிகாரிகள் உறுப்பினர் தானத்திற்குத் தேர்தலில் நிற்பதற்கும் இடமிருக்கக்கூடாது. ஆனால், அவர்களும் உறுப்பினர்களல்லாத மற்றவர்களைப் போல் தலைவர் உதவித் தலைவர் தானங்களுக்குத் தேர்தலுக்கு நிற்கவும் இடந்தரலாம். உறுப்பினராக இல்லாதவர்களையும் இந்தத் தானங்களுக்கு நிற்க இடந்தருவதால் உறுப்பினர் தானங்களுக்கு நிற்கப் பிரியமில்லாத பெரிய ஆட்களும் இவற்றிற்கு நிற்கப் பிரியப்படலாம்.

தலைவர், உதவித்தலைவர் தானங்களுக்காக நிற்பவர்கள், உறுப்பினரா யிருப்பினும் சரி, மற்றவராயிருப்பினும் சரி, பஞ்சாயத்தின் அப்போதைய உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பாகத்துக்குக் குறையாதவர்களுடைய சம்மதத்தைப் பெற வேண்டுமென்றுமிருக்கவேண்டும். அப்படி எவரும் பெறமுடியாது போயின், அந்தத் தானங்களுக்குத் தகுதியானவர்களைக் கலக்டரே நியமித்துவிடலாம். இந்த முறை பஞ்சாயத்துக்களின் பழைய அனுபவத்திற்கும் இப்போதைய நிலைமைக்கும் தற்காலக் குடியாட்சிப் போக்கிற்கும் கூடியவரை ஒருவாறாகப் பொருந்தவும் செய்யும். இந்த முறையினால் திட்டமாக, கிராமங்களில் கட்சிகளுக்கு அதிக இடமிராது; அவை குறைந்தும் போகும். (பஞ்சாயத்துப் பூராவும் ஒரே இனமாக இருந்தாலும் கட்சிக்கு இடமிராது. பல இனங்கள் சேரும் பொழுதுதான் சிறுபான்மை இனங்களை ஒரு சிலரை அலட்சியம் செய்யவும் கட்சி வளரவுமாக நேர்ந்துவிடுகிறது. மூன்றிலிரண்டு பாக மென்றிருப்பதிலும் நான்கில் மூன்றுபாக மென்றிருந்தால் பிற இனங்களை இன்னும் அதிகமாகக்கூடத் தழுவிப்போக வேண்டியதும் வரும். முற்காலத்தில் எல்லாருடைய சம்மதமும் வைத்தே ஒருவரை நியமிப்ப தென்பதிருந்தது. அப்படி இப்பொழுது நடக்கக் கூடியதில்லை.)

பஞ்சாயத்து ஆரம்ப காலத்திலும் உறுப்பினர்களை நியமித்தலென்பது வேண்டாத காரியம். திறமையும் யோக்கியதையும் பொறுப்புணர்ச்சியும் இல்லாத காரணமாகப் பஞ்சாயத்துக்கள் கேடடையும் பொழுது அதனைக் கலைத்து வேறு பஞ்சாயத்து உறுப்பினர்களை நியமிப்பதென்பதும் சாத்தியமான காரியமல்ல. சனங்களால் தேர்ந்தெடுக்கப் படுவதற்குச் சரியான ஆட்களில்லாத ஒரு கிராமத்தில் அரசாங்கம் நியமிப்பதற்குச் சரியான ஆட்கள் கிடைத்துவிடக் கூடியதாயு மிராது. அப்படிச் சந்தர்ப்பங்களில் ஒரு தனி யதிகாரியை (Special officer) நியமித்துப் பஞ்சாயத்தின் நிருவாகத்தை நடத்தி வருவதே உசிதமான காரியமாகும்.

சாலைவரியென்று நிலவரியின் பேரில் வசூலித்து வரும் மேல் வரி (Land cess) விவசாயிகளினுடைய நிலங்களுக்குப் போகவரப் பாதைகள் போடவும் அப்படிப் பாதைகளைச் செப்பனிட்டு வரவும் மட்டுமே செலவழிக்கப் பட்டுவருகிறதென்றாலும் அது பொருந்தும். ஆகையால், அவர்களுடைய காடுகளுக்குப் போகும் பாதைகள் போடவும் அவற்றைச் செப்பனிட்டு வரவும் பஞ்சாயத்து நிதியைச் செலவழிக்கக் கூடுமெனவு மிருக்கவேண்டும்; அப்படிச் செலவு கட்டாய-இனமாகவு மிருக்கவேண்டும்.

கால்நடைப் பவுண்டுகளுள்படப் பொது சனப் பிரயோசனமான கிராம வேலைகளும் சொத்துக்களும் பஞ்சாயத்துக்களினிடமே ஒப்புவிக்கப்பட வேண்டும். அவற்றைச் சரியாக நிர்வகித்து வரும் வரை அவற்றினிடமே அவை யிருந்து வரவும் வேண்டும்,

34 வது விதியில் நிருவாக அதிகாரிகளென்ற வார்த்தைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். (இப்பொழுது புதிதாகச் சேர்த்திருப்பன, வளைவிற்குள் அடக்கப் பட்டிருக்கின்றன.)

கிராம தூதன் ஆசிரியர்.

---

**10. கதை : சரித்திரம்**

# யானையைக்கட்டி யாரால் தீவனம் போட முடியும்?

முன்னொரு காலத்தில் கோழிக் கோட்டத்தில் கொங்கணனென்றோர் அரசனிருந்தான். அந்நாட்டின் குடிகள் குழந்தைகளுள்பட ஏழாயிரம் பெயரேயாகும். அவர்களுக்குத் தலைக்குச் சராசரி ஒரு ஏக்கர் நிலங்கூடக் கிடையாது. அவர்களுக்கு நிலத்தில் கிடைக்கும் வரும்படி அவர்கள் உணவிற்கே போதியதாக இருக்கவில்லை. இந்த நிலைமையிலும், நிலவரி நிகரவரவில் பேர் பாதிக்கு மேலாக இருந்தது. அந்த அரசன் சிற்றரசனாக இருந்தபோதிலும், அரச அங்கமொன்றையுங் குறைத்துக்கொள்ளவில்லை. பட்டாளம் என்ற பெயரால் அறுபது வீரர்களுமிருந்தனர்; கோட்டை கொத்தளங்களுமிருந்தன. நிலவரி தவிர்த்துச் சாராயம் புகையிலை முதலியனவற்றிற்கும் கடுமையான வரி விதிக்கப்பட்டிருந்தது. தலைக்கட்டு வரியும் வசூலிக்கப்பட்டு வந்தது. இப்படியாக, நிரம்ப வரிகள் வசூலித்தும், அவை அரசனுக்கும் அவனுடைய மந்திரி பிரதானிகளுக்கும் செலவிற்குக் கூடக் காணவில்லை. இப்படியிருந்தாலென்ன செய்கிறதென்று அரசனும் மந்திரி பிரதானிகளும் வெகுகாலமாக யோசித்து வந்தனர். கடைசியாக, அந்த அரசனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"தீய செயல்கள் விருத்தியாகிற மாதிரி நற்குண நற்செய்கைகள் நம்முலகில் விருத்தியாவதில்லை. தீய செயல்களிலும் நயவஞ்சகமான நம்பிக்கை மோசமான செயல்கள் மாதிரியாக மற்றத் தீச் செயல்களும் விருத்தியாவதில்லை. ஆகையால், பெரும் மோசமான தீச் செயல் எதுவெனத் தீர விசாரித்தறிய வேண்டும். அச்செயலை அரசாங்க அனுமதியுடன் பகிரங்கமாகவும் செய்து வர இடந்தரவேண்டும். அப்படி அனுமதிக்க ஒரு கட்டணமும், வசூலித்து வர வேண்டும். அந்தக் கட்டணத்தையும் ஆரம்பத்தில் சிறியதாக ஏற்படுத்திப் பின் அச்செயல்கள் விருத்தியாக ஆக உயர்த்திக்கொள்ள வேண்டும்" என்றெண்ணினான். இந்த யோசனையைத் தன் மந்திரி பிரதானிகளுக்கும் சொன்னான். அவர்களும் "அதுவே சரி, அதுவே சரி" யென அந்தக் கொங்கணன் யோசனையை ஆமோதித்தார்கள்.

பின் தன் குடிகளின் மனதைப் பெரிதும் கவர்ச்சி செய்யத்தக்க பெரும் தீச்செயல் யாதென ஆலோசித்தான். சூதாட்டமே அவனுக்கு அத்தகைய பெரும் மோசமான செயலாகத் தோன்றியது. அதனால் விளையக்கூடிய பெரும் பாதகங்களும் அவனுக்குப் பொருட்டாகத் தோன்றவில்லை. சூதாடுகிறவர்கள் தோல்வியுறினும் வெற்றி பெறினும் சூதாடுகிற இடத்திற்குச் சொந்தக்காரன் அவர்களிடமிருந்து தன் வாடகையைப் பெறுகிறான்; ஆகையால், சூதாடுகிற இடத்திற்கே கட்டணம் வசூலிக்கிறதென்றும் அனுமதி தருகிறதென்றும் தீர்மானித்தான்.

அக்கம்பக்க நாடுகளிலெல்லாம் சூதாட்டத்திற்குச் சிறைத் தண்டனையும் ஏற்படுத்தியிருந்ததால், அந்நாடுகளிலுள்ள சூதாடிகளும் இந்நாட்டிற்கே வரலாயினர். அரசனுடைய வரவும் நாளுக்கு நாள் அதிகமாயிற்று. அந்நாட்டுக் குடிகளும் சூதாட்டத்தில் இறங்கினர். களவுகளும் சண்டை சச்சரவுகளும் கலகங்

களும் பெருகின. அவற்றைக் கண்டிப்பதற்கும் தடுப்பதற்கும் அதிகாரிகளும் அந்நாட்டிலில்லை. கடைசியாக, சூதாட்ட மந்திரியும் சூதாடிகளின் கோபாவேசத்திற்கு இரையானான். அதற்கு மேலும் சண்டை சச்சரவுகளையும் கலகங்களையும் தவிர்க்காதிருக்க, அரசன் விரும்பவில்லை. முதலாவதாக, கொலை செய்தவனைத் தண்டிக்க விரும்பினான். அவனைத் தூக்கிலாவது இடவேண்டுமே! அதற்கு அந்நாட்டில் தூக்குமரமும் கிடையாது. தூக்கு மேடை கட்டவும் தூக்கு மரம் செய்யவும் அவனிடம் பணமுங் கிடையாது. அவனை நம்பிக் கடன் கொடுப்பாரும் கிடையாது. என்ன செய்வான்? கொலையாளியைத் தண்டிக்காது போனால், நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டுவிடும்; தண்டிக்கிறதற்கோ, கையில் பணம் கிடையாது. மந்திரி பிரதானிகளைக் கூப்பிட்டான். அவர்களும் அவனும் இந்தச் சங்கடத்திலிருந்து எப்படித் தப்பிப்பதென்று வெகு நேரம் யோசனை செய்தார்கள். "கொலையாளியைத் தூக்குவதென்றால்தானே நமக்கு இப்பொழுது பணம் வேண்டியதிருக்கிறது. அவனை ஆயுள் பூராவும் காவலில் வைத்துவிடுவோம்; அவனைக் காத்துவருகிற பாராக்காரனே அவனுக்கு அரண்மனையிலிருந்து உணவும் ஆடை முதலிய தேவையும் வாங்கிக்கொடுத்துவரட்டும்; அதுவே எனக்குச் சரியான யோசனையாகத் தெரிகிறது" என்று ஒரு மந்திரி சொன்னான். அரசனும் மற்ற மந்திரிகளும் வேறு மாற்று யோசனைகளுண்டா வென்று பார்த்தும் ஒன்றும் பிடிபடவில்லை. அப்படியே முடிவு செய்தார்கள்.

இப்படியாக, ஓராண்டு கழிந்தது. பின் வரவு செலவுத் திட்ட இனங்களை அரசன் கவனிக்கிறபொழுது ஒரு புதிய இனம் ஒன்று தோன்றிற்று. அந்த இனத்தில் வருடத்திற்கு முந்நூறு ரூபா செலவும் கண்டிருந்தது. அதனைப் பார்த்ததும் அரசன் பதறிப்போனான். இப்படி யொரு கொலையாளியை அரசாங்க வரிப் பணத்திலிருந்து காப்பாற்றி வருவதா? யோக்கியர்களுடைய வரிப் பணத்தை இப்படியாக அயோக்கியர்களைக் காப்பாற்றுவதில் செலவழிப்பதா? என்றெல்லாம் யோசித்தான். மந்திரி பிரதானிகளிடமும் சொன்னான். இந்தக் கொலையாளியைச் சிறையில் போட்டதிலிருந்து சூதாட்டமும் குறைந்தது. அதனால் அரசாங்க வரவும் குறைந்தது; அப்படி வரவு குறைந்த நிலைமையிலும் முன்போல் செலவழித்துவருவது அதிகச் சிரமமாக இருந்தது. அதனைச் சகிக்கமுடியாமல் அந்தக் கொங்கணன் பின்னும் மந்திரி பிரதானிகளோடு கலந்தான். அவர்களில் பிரதான மந்திரி 'பாராக்காரன் அனாவசியம்; அவனுக்கு உணவு அளித்து வருவதோடு சம்பளமும் கொடுக்கவேண்டியதிருக்கிறது. அவனை நீக்கிவிட்டால், அரசாங்கச் செலவும் அவ்வளவிற்குக் குறைந்துபோகுமென்று சொன்னான். அது சரியான யோசனைதான், அப்படியே செய்துவிடலா மென்று மற்றவர்களும் சொன்னார்கள்; அப்படியே பாராக்காரனையும் நீக்கிவிட்டார்கள்.

அந்தக் கொலையாளிக்குப் பாராக்காரனை நீக்கிய விவரம் தெரியாது. பாராக்காரன் வழக்கம்போல் தன் உணவை அரண்மனையிலிருந்து வாங்கி வருவானென்று காத்திருந்து பார்த்தான்; வரவேயில்லை. பிறகு தானே அரண்மனைக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தான். இப்படியும் ஓராண்டு கழிந்தது. இந்த நூறு ரூபாச் செலவும் அந்தக் கொங்கணனுக்கு அதிகமாகத் தோன்றியது. இந்த யானையைக் கட்டி யாரால் தீவனம் போட முடியுமென்று மந்திரி பிரதானிகளைக் கூப்பிட்டுச் சொன்னான். அவர்களும் வெகுநேரம் யோசித்துப் பார்த்தார்கள். ஒரு வழியும் தோன்றவில்லை. பாராக்காரனில்லை யென்று தெரியவுமே இவன் ஓடிப்போயிருக்கலாம். அப்படி இதுவரையும் போகாதவன் இனிமேல் சொன்னாலும் போகமாட்டான்; எதற்கும் சொல்லிப் பார்க்கலாமென்று ஒரு மந்திரி சொன்னான். சரி, அதுவும் நல்ல யோசனைதான். நீயே சென்று சொல்லிப் பாரென்று அந்தப் பொறுப்பை அவனுக்கே ஏற்பித்தார்கள்.

அந்தக் கொலையாளிக் கைதியைக் கூப்பிட்டு, இதுகூடத் தெரியாதிருக்கிறாயே! நீ ஓடிப்போனால், உன்னை ஒருவரும் ஒன்றும் செய்யப் போகிறதில்லை. எதற்கும், நானும் வெளியே சொல்லாமலிருந்து விடுகிறேன். நீ இந்நாட்டைவிட்டுச் சீக்கிரம் ஓடிப்போய்விடு என்று அவனுக்கு யோசனை சொன்னான். அவன், அதற்கு 'ஐயா, அது முடிகிற காரியமில்லை. நான் எங்கே ஓடிப்போக முடியும்? ஓடிப்போய்த்தான், என்ன செய்யப்போகிறேன்? என்னையோ ஒருவரும் வேலைக்கெடுத்துக்கொள்ள மாட்டார்கள். எனக்கொரு வேலையும் விளங்காது. இப்பொழுது இரண்டாண்டுகளாகத் தண்டச்சோறு சாப்பிட்டும் வழக்கமாகிவிட்டது. இனி நான் வளையப் போகிறதுமில்லை' யென்று சொல்லிவிட்டான்.

திரும்பவும் மந்திரி பிரதானிகள் அரசனுடைய கொலுவில் கூடினார்கள். தன்னால் முடியவில்லை யென்று அந்த மந்திரி கைதி சொன்னதை விளக்கியும் சொன்னான்; அதனைக் கேட்டார்கள்; திகைத்துப் போனார்கள். அவனைக் கூப்பிட்டு நேரிலும் சொல்லிப் பார்த்தார்கள். தன் பிழைப்பிற்கு ஏதேனும் உதவி செய்கிறதாக இருந்தால் சிறைக் கூடத்தை விட்டுத் தனது நாட்டுக்குப் போய்விடுவதாகவும் ஒப்புக்கொண்டான். அவனுக்கு மாதம் மூன்று ரூபா அனுப்பி வருகிறதாகச் சொல்லி அந்த மாதப் பணத்தை முன் பணமாகவும் கொடுத்தனுப்பிவிட்டார்கள். சூதாட்டத்தினால் வந்த இலாபம் போதுமென்று அதன் கட்டணத்தையும் இரத்துச் செய்துவிட்டார்கள். அந்தக் கோட்டத்தில் எங்குமே சூதாடக்கூடாதென்றும் நிறுத்திவிட்டார்கள். தங்கள் செலவுகளையும் சம்பளங்களையும் குறைத்துக்கொண்டார்கள். குடிகளுக்கும் அவர்கள் சம்பாத்தியம் அதிகமாகும்படியாக நிலவரியை நிகரவரவில் கால்வாசியாகவும் குறைத்துவிட்டார்கள். குடிகளும் சோம்பித் திரியாமல் உழவோடு பல வேறு தொழில்களும் செய்து வந்தார்கள். அதுமுதல் குடிகள் வரவும் அதிகமாகி நாடும் செழித்தது; அரசன் பாடும் குறைவில்லை.

---

## 11. செய்தித் திரட்டு :

### அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

I. 1937 ம் பசலி முதல் 1350ம் பசலி முடியக் காட்டிவந்த நில வரிச் சலுகைகள் முன் போலவே நடப்புப் பசலிக்கும் காட்டப்படும்.

1. 1914-ம் ஆண்டிற்குப் பின் நில வரி மறு திட்டங்களில், (Resettlements) கூட்டப்பட்ட தீர்வைகள் வசூலிக்கப்படமாட்டா; அப்படி நிலங்கள் தீவுகரிவானால், விதிகளின் படி கழிக்கக்கூடிய தீர்வையும் கழிக்கப்படும்.

2. மாகாணத்தின் மற்றப் பாகங்களில் நன்செய்த் தீர்வையில் ரூபாவுக்கு இரண்டணா கழிக்கப்படும்.

3. கீழ்க் கோதாவரி மேல் கோதாவரி கிருட்டிணா சில்லாக்களிலும் குண்டூர் தீரவாசப் பிரதேசத்திலும் தண்ணீர்த் தீர்வை குறைத்து வசூலிக்கப்படும்.

Madras Press Communique, No. 70.

II. மதுரை மலங்காட்டுப் பகுதியில் (Forest Division) பழனி மலையில் ஒதுக்கப்பட்ட காடுகளிலும் (Reserved Forest) கம்பம் பள்ளத்தாக்குத் தலைப்பில் சில பாகங்களிலும் ஆரஞ்சு முதலிய பழந்தரும் மரங்கள் போட்டு உண்டுபண்ணக்கூடிய சிறு சிறு துண்டு நிலங்கள் பல இருக்கின்றன. அவற்றை இணக்கமான நிபந்தனைகளின் பேரில் கட்டுக் குத்தகைக்கு விட அரசாங்கம் தயாராக இருக்கிறது. அந்த நிலங்கள் தேவையாயிருப்பவர்கள் மதுரை சில்லா மலங்காட்டு அதிகாரிக்கு (District Forest Officer, Madura) மனுச் செய்துகொள்ள வேண்டும். அவர் மனுதாருக்குத் தேவையான இடத்தைப் பார்வையிடுவதற்கும் எல்லை குறிப்பதற்கும் வேண்டும் உதவி செய்வார்.

Madras Press Note, No. 190.